# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
ஆளும்கட்சி / எதிர் கட்சித் தலைவர்கள்,
வார்டு குழுத் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, கோவை மேற்கு,
சிங்காநல்லூர், தொண்டாமுத்தூர்
மற்றும் பேரூர் சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

ந.க.எண் : 1783/ 2011 / எம்சி. 8 நாள் : 25.02 .2011

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற அவசரக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் வருகின்ற 28.02.2011 திங்கள்கிழமை காலை 10.30 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 3

/உண்மை நகல் /

மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

# மாமன்ற அவசரக் கூட்டம் - பிப்ரவரி 2011

## நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| | **பொருளடக்கம்** |
| | அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி |
| வ.எண் | இ). தீர்மானத்திற்குரிய பொருள் |
| 1 | கல்விப் பிரிவு - ஒண்டிப்புதூர் தெற்கு ஆரம்பப்பள்ளியின் கிளைப் பள்ளியான நெசவாளர் காலனி மாநகராட்சி ஆரம்பப் பள்ளி, - தனிப்பள்ளியாக அறிவித்தல் - அரசு ஆணை வெளியிடப்பட்டது - மாமன்றம் பதிவு செய்தல் - தொடர்பாக - |
| 2 | நகரமைப்புப் பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு எண் 38 - நகரளவு எண்கள் 926, 927, 971 - நில உரிமை மாற்றம் செய்தல் - அரசாணை வெளியிடப்பட்டது - மாமன்றம் பதிவு செய்தல் - தொடர்பாக |
| 3 | பொறியியல் பிரிவு - 3 அபிவிருத்திப் பணிகள் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 4 | பொறியியல் பிரிவு - லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 5 | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் - சிங்காநல்லூர் பேருந்து நிலையம் மற்றும் கட்டண கழிப்பிடங்கள் - குத்தகை இனங்கள் - ஒதுக்கீடு செய்தல் மற்றும் மறுஏலம் கோருதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 6 | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - 2011-14ம் ஆண்டிற்கான குத்தகை இனங்கள் - ஒதுக்கீடு செய்தல் மற்றும் மறுஏலம் கோருதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 7 | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - மேட்டுப்பாளையம் சாலை பேருந்து நிலையம் - வருடாந்திர மற்றும் மாதாந்திர குத்தகை இனங்கள் - ஒதுக்கீடு செய்தல் மற்றும் மறுஏலம் கோருதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 8 | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - சுப்ரி வீதி மற்றும் கிருஷ்ணசாமி ரோடு கடைகள் மற்றும் பன்னீர் செல்வம் பூ மார்க்கெட் மேடைக் கடைகள் ஒதுக்கீடு செய்தல் மற்றும் மறுஏலம் கோருதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 9 | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு எண் 41 - எல்.ஜி. தோட்டம் - சமுதாயக் கூடம் - வாடகை நிர்ணயம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 10 | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு எண் 41 - சிலேட்டர் ஹவுஸ் சாலை - சமுதாயக் கூடம் - வாடகை நிர்ணயம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 11 | பணியமைப்பு - டெக்ஸ்கோ ஓட்டுநர்கள் - பணி நீட்டிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 12 | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் - உக்கடம் மீன் மார்க்கெட் - ஒப்படை செய்யப்பட்ட 66 கடைகள் நீங்கலாக மீதமுள்ள கடைகள் - ஒப்பந்தப்புள்ளி கோரியது - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 13 | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - சீனிவாசபுரம் மாநகராட்சி திருமண மண்டபம் - பொதுஏலம் விடுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 14 | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் - குத்தகை இனங்கள் - ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 15 | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் - தியாகி குமரன் மார்க்கெட் மற்றும் அவிநாசி சாலை வணிக வளாகங்கள் - உரிமதாரர் பெயர் மாற்றம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 16 | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் - காந்திபுரம் பேருந்து நிலையம் - தளம் எண் 1, 2, 3, 4 ல் உள்ள கடைகள் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது - ஒதுக்கிடு செய்தல் மற்றும் மறுஏலம் கோருதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| 17 | வருவாய் பிரிவு - வடக்கு வண்டலம் - குத்தகை இனங்கள் -ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது - ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 18 | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - மேட்டுப்பாளையம் சாலை குப்பைக்கிடங்கு வளாகம் - எரிவாயு மயானம் அமைத்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 19 | நகரமைப்புப் பிரிவு -20 பயணிகள் நிழற்குடைகள்- விளம்பரம் செய்து பராமரித்தல் பணி - ஒப்பந்தப்புள்ளி கோரியது - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 20 | பொறியியல் பிரிவு - 3 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 21 | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 30 - கணபதி கிராமம் - எரிவாயு மயானம் அமைத்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 22 | பொது சுகாதாரப் பிரிவு - ஆர்.எஸ்.புரம் - மாநகராட்சி இரவு தங்கும் விடுதி – மனநலம் குன்றியவர்களுக்கு சிகிச்சை அளித்தல் - கொங்கு நாடு மனநல அறக்கட்டளை ஏற்று நடத்துதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 23 | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் - உக்கடம் பேருந்து நிலையம் மற்றும் கே.ஜி. திரையரங்கம் முன்புறம் - ஆவின் பாலகம் அமைத்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

நன்றியுரை

அ) திருக்குறள்

துாங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவற்கு.

(குறள் 383)

விளக்கம்

காலம் தாழ்த்தாத விரைவான நடவடிக்கைகளும், அறிவுடைமையும், துணிவும் நாடாளுகின்றவர்களுக்குத் தேவையானவையும், நீங்காமல் நிலைத்திருக்க வேண்டியவையுமான பண்புகளாகும்.

திருவள்ளுவர்

---

ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

## பொருள் எண் 1

**பார்வை** அரசாணை நிலை எண். 4. பள்ளிக் கல்வித் (சி 2) துறை நாள் 12.01.2011

----------

கோயம்புத்தூர் மாநகராட்சி ஒண்டிப்புதூர் தெற்கு ஆரம்பப்பள்ளியின் கிளைப் பள்ளியாக ஒண்டிப்புதூர் நெசவாளர் காலனி பகுதியில் செயல்பட்டு வந்த ஆரம்பப்பள்ளியை தனிப்பள்ளியாக அங்கீகரிக்க அரசு அனுமதி கோர மாமன்ற தீர்மானம் எண். 445 நாள் 16.06.1998-ன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு உரிய கருத்துருக்களுடன் அரசுக்கு விண்ணப்பிக்கப்பட்டது.

அரசாணை நிலை எண். 4. பள்ளிக் கல்வித் (சி 2) துறை நாள் 12.01.2011-ன்படி மாநகராட்சி ஒண்டிப்புதூர் (தெற்கு) ஆரம்பப்பள்ளியின் கிளைப்பள்ளியாக இயங்கி வரும் நெசவாளர்காலனி ஆரம்பப்பள்ளியை தனிப்பள்ளியாக அங்கீகரித்து ஆணையிடப்படட்டுள்ளது.

அரசாணை நிலை எண். 4. பள்ளிக் கல்வித் (சி 2) துறை நாள் 12.01.2011 மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** பதிவு செய்யலாம். எண். 66 / 97/ கே 2

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 255 நாள் 28.02.2011</u>

அரசாணை (நிலை) எண். 4. பள்ளிக் கல்வித் (சி 2) துறை நாள் 12.01.2011 பதிவு செய்யப்பட்டது

---

## பொருள் எண் 2

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண்.38 நவாப் ஹக்கீம் சாலை, சௌடம்மன் கோயில் சந்து, நகரளவு எண்கள் 926, 927 மற்றும் 971-ல் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான 153 சதுரடி இடத்தினை திரு.ச.ரமேஷ் மற்றும் நால்வருக்கு வழங்கி அதற்கு பதிலாக நகரளவு எண்.927-ல் உள்ள மனுதாரர்களுக்கு சொந்தமான 162 சதுரடி நிலப்பரப்பை கோவை மாநகராட்சிக்கு பரிவர்த்தனை முறையில் நில உரிமை மாற்றம் செய்தல் - அரசாணை நிலை எண்.44 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந2) துறை நாள் 17.2.2011-ஐ மாமன்றத்தின் தகவலுக்கும் பதிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 9622/2008/ எச்.1(தெ)

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.256 நாள் 28.02.2011</u>

அரசாணை (நிலை) எண்.44 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.2) துறை நாள்.17.02.2011 பதிவு செய்யப்பட்டது.

---

## பொருள் எண் 3

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 21.02.2011 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் | விலை குறை-வுக்கு பின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 11988/10/ எம்.டி.4 | வார்டு எண்.42 திரு நகர் பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 19.98 | 10-02-2011 இரண்டாம் அழைப்பு | தி/ள் எம்.எஸ். இன்ஜினியர்ஸ் | 7.01 அதிகம் | 4.97 அதிகம் |
| 2 | 10988/10/ எம்.டி.4 | வார்டு எண்.12 இலாஹி நகர் மற்றும் பிஸ்மி நகர் பகுதியில் நொய்யல் ஆறுவரை மழைநீர் வடிகால் அமைத்தல் | 19.75 | 10-02-2011 இரண்டாம் அழைப்பு | தி/ள் எம்.எஸ். இன்ஜினியர்ஸ் | 7.92 அதிகம் | 4.97 அதிகம் |
| 3 | 4443/10/ எம்.டி.4 | வார்டு எண்.45 வீராசாமி பள்ளி சாலை, உப்பார வீதி, தியாகி குமரன் வீதி ஆகிய பகுதிகளில் மூடுபலகையுடன் நடைபாதை அமைத்தல் | 12.50 | 10-02-2011 இரண்டாம் அழைப்பு | தி/ள் எம்.எஸ். இன்ஜினியர்ஸ் | 7.96 அதிகம் | 4.97 அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு :- வரிசை எண்.1,2 மற்றும் 3-ல் உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 11988/2010/எம்.டி.4

மாநகர மன்ற தீர்மானம் எண்.257 நாள் 28.02.2011

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 4

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் தனியார் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய உத்தேச செலவினம் ரூ.75.00 இலட்சத்திற்கு மாமன்றம் தனது தீர்மான எண்.179 நாள் 05-01-2011 அன்று நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. இப்பணிக்கு கடந்த 14-02-2011 அன்று முதல் அழைப்பாக மின்னனு முறையில் (e-tender) ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் திரு.கே.எஸ்.ராமலிங்கம், கோவை மற்றும் திரு.ஜி.செந்தில் குமார், கோவை ஆகியோர் ஒப்பந்தப்புள்ளி அளித்து இருந்தனர். இவர்கள் சமர்ப்பித்த ஒப்பந்தப்புள்ளிகளை 17-02-2011 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழுவில் பரிசீலிக்கப்பட்டதில் மேற்படி ஒப்பந்ததாரர்களின் தகுதிகாண் கூறுகள்(Qualification Criteria) திறனாய்வு செய்ததில் திரு.கே.எஸ்.ராமலிங்கம், கோவை மற்றும் திரு.ஜி.செந்தில் குமார், கோவை ஆகியோர் தேர்வு பெற்றுள்ளனர். எனவே இவர்கள் அளித்துள்ள விலைப்புள்ளி உறையை 18-02-2011 அன்று திறக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் அளித்துள்ளனர்.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | 9000 லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரிகள் | 3500 லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரிகள் |
|---|---|---|---|
| | | நடை ஒன்றிற்கு | நடை ஒன்றிற்கு |
| 1. | திரு.ஜி.செந்தில்குமார், கோவை | ரூ.781.00 | ரூ.480.00 |
| 2. | திரு.கே.எஸ்.ராமலிங்கம், கோவை | ரூ.799.00 | ரூ.499.00 |

மேற்படி, இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள திரு.ஜி.செந்தில்குமார், அவர்களிடம் மேலும் விலையினை குறைத்து கொடுக்க கேட்டு கடிதம் அனுப்பியதில் இவர் தனது 21-02-2011-ம் தேதிய கடிதத்தில் டீசல் விலையேற்றம் மற்றும் லாரி உதிரி பாகங்கள் விலையேற்றம் முதலானவற்றை கருத்தில் கொண்டுள்ளதாக தெரிவித்து கீழ்க்கண்டவாறு விலையினை மேலும் குறைத்துக் கொடுத்துள்ளார்.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | 9000 லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரிகள் | 3500 லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரிகள் |
|---|---|---|---|
| | | நடை ஒன்றிற்கு விலை குறைப்பிற்கு பின்னர் | நடை ஒன்றிற்கு விலை குறைப்பிற்கு பின்னர் |
| 1. | திரு.ஜி.செந்தில்குமார், கோவை | ரூ.690.00 | ரூ.450.00 |

(2010-11 விலைப்புள்ரி விபரம் ரூ. 581.00 ரூ. 380.00)

விலைகுறைப்பிற்கு பின்னர் இந்த ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள விலை விகிதத்தினை மாமன்றம் ஏற்கலாம் என 21-02-2011 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழுவில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. வரும் மே மாதம் சட்டமன்ற தேர்தல் நடைபெற இருப்பதாலும், தேர்தல் நன்னடத்தை விதிமுறைகள் அமுலுக்கு வருவதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கவும் அத்தியாவசிய பணியான குடிநீர் விநியோகத்தை கருத்தில் கொண்டு இப்பணிக்கு விலைகுறைப்பிற்கு பின்னர் குறிப்பிட்டுள்ள விலைவிகிதத்தினை அளித்துள்ள திரு.ஜி.செந்தில்குமார், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண்:13922 / 2010 / எம்.டி.2

---

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.258 நாள் 28.02.2011</u>

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 5

பொருள் : கோயமுத்தூர் மாநகராட்சி- கிழக்கு மண்டலம் - சிங்காநல்லூர் பேருந்து நிலையம் மற்றும் கட்டண கழிப்பிடங்களுக்கு வருடாந்திர குத்தகை உரிம இனங்களுக்கு 11.02.2011 அன்றும் 18.02.2011 அன்றும் நடைபெற்ற பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் உச்ச கேள்விதாரா்களுக்கு இனங்களை ஒப்படைத்தல் மற்றும் ஒப்பந்தப்புள்ளி/ மின் ஏலம் கோரப்பட்டதற்கு பின்பு 21.02.2001 அன்று மறு ஏலம் உச்ச வரம்பிற்கு அதிகமான தொகைக்கு 5% உயா்வு செய்து உச்ச வரம்பு ஒப்பந்தப்புள்ளி கேள்விதாரா்களுக்கு இனங்களை ஒப்படைத்தல் - சம்பந்தமாக

பார்வை : வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 135 நாள் 25.02.2011

------

கோயமுத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலம், சிங்காநல்லூர் பேருந்து நிலையம் மற்றும் கட்டண கழிப்பிடங்களுக்கு வருடாந்திர உரிம இனங்களுக்கு 11.02.2011 அன்றும் 18.02.2011 அன்றும் நடைபெற்ற பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் கேள்விதாரா்களுக்கு இனங்களை ஒப்படைத்தல் மற்றும் ஒப்பந்தப்புள்ளி/ மின் ஏலம் கோரப்பட்டதற்கு பின்பு 21.02.2001 அன்று மறு ஏலம் உச்ச வரம்பிற்கு அதிகமான தொகைக்கு 5% உயா்வு செய்ததில் கீழ்க்கண்ட விவரங்களின்படி.

<u>இனம் எண்.1 ராமநாதபுரம் மாநகராட்சி கட்டண கழிப்பிடம்.(வருடாந்திர அடிப்படையில்)</u>

| வ. எண். | பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட வருடாந்திர உரிமத் தொகை | வருடாந்திர உரிமக் கட்டணம் உச்சக் கேள்வி | | | உயா்ந்த பட்ச ஏலம் / ஒப்பந்தப் புள்ளி தொகை |
|---|---|---|---|---|---|---|
| | | | மின் ஏலத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | மறு ஏலத்தில் 5% ஒப்பந்தப்புள்ளி தொகை | |
| 01. | திரு வி.மணிவண்ணன் | 2,37,000 | - | 2,52,999 | | |
| 02. | திரு எம்.ரவி | 2,37,000 | 2,41,000 | 1,60,000 | | |
| 03. | திரு எம்.ஏ.கலீல் ரகுமான் | 2,37,000 | - | 1,45,000 | | |
| 04. | திரு எம்.அன்புராஜ் | 2,37,000 | - | 1,50,000 | 2,65,649 | 2,65,649 |

வரிசை எண்.1-ல் கண்ட இனத்திற்கு அரசு நிர்ணயிக்கப்பட்ட வருடாந்திர உரிமத் தொகையினை விட உயா்ந்தபட்ச கேள்விதாரா் திரு வி.மணிவண்ணன் அவா்கள் கோரியுள்ளாா். ஆனால் திரு. எம். அன்புராஜ் உயா்ந்தபட்ச கேள்வித் தொகை ரூ. 2,52,999/- ல் 5% கூடுதலாக ரூ. 2,65,649/-க்கு மறு ஏலம் நடத்த 21.02.2011ல் கடிதம் கொடுத்துள்ளாா். இனம் எண். 1-க்கு மறு ஏலம் கொண்டு வரலாம்.

<u>இனம் எண். 2 புலியகுளம் மாநகராட்சி கட்டண கழிப்பிடம்.(வருடாந்திர அடிப்படையில்)</u>

| வ. எண். | பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட வருடாந்திர உரிமத் தொகை | வருடாந்திர உரிமக் கட்டணம் உச்சக் கேள்வி | | | உயா்ந்த பட்ச ஏலம் / ஒப்பந்தப் புள்ளி தொகை |
|---|---|---|---|---|---|---|
| | | | மின் ஏலத் தொகை ரூ. | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | மறு ஏலத்தில் 5% ஒப்பந்தப் புள்ளி தொகை | |
| 01. | திரு வி.மணிவண்ணன் | 1,82,000 | - | 2,07,000 | - | 2,07,000 |
| 02. | திரு சி.செல்வம் | 1,82,000 | 1,83,000 | 1,15,000 | - | |

வரிசை எண்.2-ல் கண்ட இனத்திற்கு அரசு நிர்ணயிக்கப்பட்ட வருடாந்திர உரிமத் தொகையினை விட உயர்ந்தபட்ச கேள்விதாரர் திரு வி.மணிவண்ணன் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யலாம்.

இனம் எண்.3 பாப்பநாயக்கன்பாளையம் மாநகராட்சி கட்டண கழிப்பிடம்.(வருடாந்திர அடிப்படையில்)

| வ. எண். | பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட வருடாந்திர உரிமத் தொகை | வருடாந்திர உரிமக் கட்டணம் உச்சக் கேள்வி | | | உயர்ந்த பட்ச ஏலம் / ஒப்பந்தப் புள்ளி தொகை |
|---|---|---|---|---|---|---|
| | | | மின் ஏலத் தொகை ரூ. | ஒப்பந்தபுள்ளி தொகை ரூ. | மறு ஏலத்தில் 5% ஒப்பந்தப் புள்ளி தொகை | |
| 01. | திரு சி.செல்வம் | 1,50,000 | 1,51,000 | 1,17,000 | - | - |

வரிசை எண்.3-ல் கண்ட இனத்திற்கு அரசு நிர்ணயிக்கப்பட்ட வருடாந்திர உரிமத் தொகையினை ஏலதாரர் ஒருவர் மட்டுமே கலந்து கொண்டதால் இதனை மறு ஏலத்திற்கு கொண்டு வரலாம்.

இனம் எண். 4 ரேஸ்கோர்ஸ் மாநகராட்சி கட்டண கழிப்பிடம்.(வருடாந்திர அடிப்படையில்)

வரிசை எண்.4-ல் கண்ட இனத்திற்கு ஏலதாரர் எவரும் கலந்து கொள்ளாததால் இதனை மறு ஏலத்திற்கு கொண்டு வரலாம்.

இனம் எண். 5 சிங்காநல்லூர் பேருந்து நிலையம் நுழைவுக் கட்டணம் (வருடாந்திர அடிப்படையில்)

| வ. எண் | பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட வருடாந்திர உரிமத் தொகை | வருடாந்திர உரிமக் கட்டணம் உச்சக் கேள்வி | | | உயர்ந்த பட்ச ஏலம் / ஒப்பந்தப் புள்ளி தொகை |
|---|---|---|---|---|---|---|
| | | | மின் ஏலத் தொகை ரூ. | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | மறு ஏலத்தில் 5% ஒப்பந்தப் புள்ளி தொகை | |
| 01. | திரு வி.மணிவண்ணன் | 9,91,000 | 10,81,000 | 9,80,001 | 12,62,123 | 12,62,123 |
| 02. | திரு சி.செல்வம் | 9,91,000 | - | | - | |
| 03. | திரு நாச்சிமுத்து | 9,91,000 | - | - | - | |

வரிசை எண்.5-ல் கண்ட இனத்திற்கு அரசு நிர்ணயிக்கப்பட்ட வருடாந்திர உரிமத் தொகையினை விட உயர்ந்தபட்ச கேள்விதாரர் திரு சி. செல்வம் கோரியுள்ளார். மேலும் திரு வி.மணிவண்ணன் உயர்ந்தபட்ச கேள்வித் தொகையில் ரூ. 12,02,022 /- ல் 5% கூடுதலாக 12,62,123/-க்கு மறு ஏலம் நடத்த 21.02.2011-ல் கடிதம் கொடுத்துள்ளார். எனவே, இனம் எண்.5-க்கு மறு ஏலம் கொண்டு வரலாம்.

இனம் எண். 6 சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் பொருட்கள் பாதுகாப்பு அறை (வருடாந்திர அடிப்படையில்)

| வ. எண். | பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட வருடாந்திர உரிமத் தொகை | வருடாந்திர உரிமக் கட்டணம் உச்சக் கேள்வி | | | உயர்ந்த பட்ச ஏலம் / ஒப்பந்தப் புள்ளி தொகை |
|---|---|---|---|---|---|---|
| | | | மின் ஏலத் தொகை ரூ. | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | மறு ஏலத்தில் 5% ஒப்பந்தப் புள்ளி தொகை | |
| 01. | திரு ஏ.சந்திரன் | 27,072 | 60,400 | 10,320 | - | 60,400 |
| 02. | திரு எஸ். அசோக்குமார் | 27,072 | - | 10,800 | - | |

வரிசை எண்.6-ல் கண்ட இனத்திற்கு அரசு நிர்ணயிக்கப்பட்ட வருடாந்திர உரிமத் தொகையினை விட உயர்ந்தபட்ச கேள்விதாரர் திரு ஏ.சந்திரன் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யலாம்.

இனம் எண். 7 சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் உணவகம் நடத்தும் உரிமை (வருடாந்திர அடிப்படையில்)

| வ. எண். | பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட வருடாந்திர உரிமத் தொகை | வருடாந்திர உரிமக் கட்டணம் உச்சக் கேள்வி | | | உயர்ந்த பட்சஏலம் / ஒப்பந்தப் புள்ளி தொகை |
|---|---|---|---|---|---|---|
| | | | மின் ஏலத் தொகை ரூ. | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | மறு ஏலத்தில் 5% ஒப்பந்தப் புள்ளி தொகை | |
| 01. | திரு ஏ.சந்திரன் | 1,35,000 | 2,08,000 | 50,000 | - | 2,08,000 |
| 02. | திரு ஜி. ரங்கராஜ் | 1,35,000 | - | 48,000 | - | |
| 03. | திரு எஸ். அசோக்குமார் | 1,35,000 | - | 75,600 | - | |

வரிசை எண்.7-ல் கண்ட இனத்திற்கு அரசு நிர்ணயிக்கப்பட்ட வருடாந்திர உரிமத் தொகையினை விட உயர்ந்தபட்ச கேள்விதாரர் திரு ஏ.சந்திரன் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யலாம்.

மேற்கண்ட இனங்களுக்கு உயர்ந்த பட்ச கேள்விதாரர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட ஏலத் தொகையை நிர்ணயம் செய்தும் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யவும், இனம் எண்.1, 3,4 மற்றும் 5-க்கு மறு ஏலம் கொண்டு வருவதற்கும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு **தீர்மானம் எண் 135 நாள் 25.02.2011ல்**

**இனம் எண்1** இராமநாதபுரம் மாநகராட்சி கட்டண கழிப்பிடம் மறு ஏலம் கொண்டு வரலாம்.

**இனம் எண் 2** புலியகுளம் மாநகராட்சி கட்டண கழிப்பிடம் உயர்ந்த பட்ச கேள்விதாரர் திரு.வி.மணிவண்ணன் அவர்களுக்கு ஒப்படை செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது..

**இனம் எண் 3 P.N. பாளையம்** புலியகுளம் மாநகராட்சி கட்டண கழிப்பிடம் மூன்றாவது முறை ஏலம் நடத்தப்பட்டதாலும் வருவாய் இழப்பு தவிர்க்கும் பொருட்டும் மாநகராட்சி நிர்ணயம் செய்யப்பட்ட தொகையைவிட குறைவாக ஏலம் கோரப்பட்டிருப்பதாலும் ஒப்படை செய்ய பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது.

**இனம் எண் 4** ரேஸ்கோர்ஸ் மாநகராட்சி கட்டண கழிப்பிடம் மறு ஏலம் கொண்டு வரலாம்.

**இனம் எண் 5** சிங்காநல்லூர் பேருந்து நிலையம் நுழைவு கட்டணம் மறு ஏலம் கொண்டு வரலாம்.

**இனம் எண் 6 மற்றும் 7க்கு** மின்ஏலத்திற்கான அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டதில் ஒராண்டு மதிப்பிற்கு பதிலாக மூன்றாண்டு மதிப்பினை பதிவு செய்யப்பட்டது. எனவே இவ்விரு இனங்களுக்கு மறு ஏலம் கோரவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவில் தீர்மானிக்கப்பட்டு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : **இனம் எண் 2 மற்றும் 3** உரிமம் ஒப்படை செய்ய அனுமதிக்கலாம்.
**இனம் எண்.1, 4, 5, 6 மற்றும் 7** இனத்தினை மறு ஏலம் கொண்டு வரலாம்.

ந.க.எண்.15525/ 2009/ கிஅ11

மாநகர மன்ற தீர்மானம் எண்.259 நாள் 28.02.2011

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண்.135 நாள் 25.02.2011ஐ ஏற்று அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண் -6

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி - மேற்கு மண்டலம் - 2011- 14 க்கான குத்தகை உரிம இனங்கள் - மூன்றாண்டுகளுக்கு ஒப்படைத்தல் – ஒப்பந்தப்புள்ளி 17.02.2011 அன்றும் மின் ஏலம் 18.02.2011 அன்று நடைபெற்றது- ஏலக் கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளி கேள்வி பெறப்பட்டது மற்றும் கேள்வி கோரப்படாத இனங்களுக்கு மறு ஏலம் நடத்த கோருதல் தொடர்பாக.

பார்வை : வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 136 நாள் 25.02.2011

----------

கோயம்புத்தூர் மாநகராட்சி - மேற்கு மண்டலம் - குத்தகை இனங்கள் 2011 -14 மூன்றாண்டுகளுக்கு ஒப்படைத்தல் ஒப்பந்தப்புள்ளி 17.02.2011 மின் ஏலம் 18.02.2011 தேதியில நடைபெற்றது. அதில் கீழ்க்கண்ட ஏலதாரர் உயர்ந்தபட்ச கேள்வி கோரப்பட்டது மற்றும் கோரப்படாதது .

| வ. எண். | குத்தகை இனங்கள் | 5% உயர்வு செய்த பின் ஏலத் தொகை | 31.01.11 ஏலத்தன்று பெறப்பட்ட உயர்ந்த பட்ச தொகை மற்றும் ஏலதாரர் பெயர் | 09.02.11 ஏலத்தன்று பெறப்பட்ட உயர்ந்த பட்ச தொகை மற்றும் ஏலதாரர் பெயர் | மூன்று வருட சராசரி ஏலத் தொகை | 17.02.11 அன்று நடை பெற்ற ஒப்பந்தப் புள்ளி மற்றும் 18.02.11-ல் மின் ஏலத்தில் கோரப்பட்ட தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | தடாகம் ரோடு வாழைக்காய் மண்டி கட்டணம் வசூலிக்கும் உரிமம் (வருடாந்திர அடிப்படையில்) | 572260 | 166666 திரு.ஜி. இருதயராஜ் | 300000 திரு.ஏ. சாதிக் பாட்சா | 399669 | 310000 திரு.எம்.ராஜ்குமார் |
| 2 | மேட்டுப்பாளையம் ரோடு மொத்த காய்கறி மார்க்கெட் கட்டண கழிப்பிடம் - கட்டணம் வசூலிக்கும் உரிமம் (வருடாந்திர அடிப்படையில்) | 448350 | 220000 திரு.ஜி. இருதயராஜ் | 225000 திரு.ஜி.இருதயராஜா | 348222 | 230000 திரு.ஜி.இருதயராஜா |
| 3 | தடாகம் ரோடு நவீன கட்டண கழிப்பிடம் - கட்டணம் வசூலிக்கும் உரிமம (வருடாந்திர அடிப்படையில்) | 711670 | ஏலத்தில் யாரும் கலந்துக் கொள்ள வில்லை | 351000 திரு.ஜி.ரங்கராஜ் | 512481 | 718000 திரு.எஸ். குமார். |
| 4 | திவான்பகதூர் ரோடு மாநகராட்சி பள்ளி வளாகத்தில் வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம (வருடாந்திர அடிப்படையில்) | 2940840 | ஏலத்தில் யாரும் கலந்துக் கொள்ள வில்லை | 1213144 திரு.ஏ.வெங்கடேஷ் | 2119468 | 2130000 திரு.ம. மகுடபதி |
| 5 | பன்னீர் செல்வம் பூமார்க்கெட் நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கம் உரிமம் (வருடாந்திர அடிப்படையில்) | 1260040 | ஏலத்தில் யாரும் கலந்துக் கொள்ள வில்லை | 678999 திரு.ஏ.வெங்கடேஷ் | 869455 | 900900 திரு.ம. மகுடபதி |

**வரிசை எண்.1 மற்றும் 2** ஆகிய இனங்களுக்கு அரசு நிர்ணயத்துள்ள மதிப்பினை விட குறைவாக வரிசை எண் ஒன்றிற்கு ரூ.310000 திரு.எம்.ராஜ்குமார் அவர்களும் வரிசை எண்.இரண்டிற்கு ரூ.230000 திரு.ஜி.இருதயராஜா அவர்களும் கோரியுள்ளார்.

**வரிசை எண். 3**-ல் குறிப்பிட்டுள்ள இனத்திற்கு அரசு நிர்ணயத்துள்ள மதிப்பினை விட அதிகமாக கோரிய ரூ.718000 திரு.எஸ்.குமார் அவர்களுக்கு ஒப்படைப்பு செய்யவும் வரிசை எண்.4-ல் உள்ள இனத்திற்கு அரசு நிர்ணயித்துள்ள மதிப்பினை விட அதிகமாக கோரிய ரூ.2130000 திரு.ம.மகுடபதி அவர்களுக்கு ஒப்படைப்பு செய்யவும் வரிசை எண்.5-ல் உள்ள இனத்திற்கு அரசு நிர்ணயித்துள்ள மதிப்பினை விட அதிகமாக கோரிய ரூ.900900 திரு.ம.மகுடபதி அவர்களுக்கு ஒப்படைப்பு செய்யவும்

**அ. வரிசை எண்.1 மற்றும் 2** ஆகிய இனங்களுக்கு அரசு நிர்ணயித்துள்ள மதிப்பினைவிட குறைவாக கோரியதால் மறு ஏலம் கொண்டு வரலாம்.

**ஆ. வரிசை எண்.3 முதல் 5 வரை** உயர்ந்த பட்ச ஏலத் தொகையினை குறிப்பிட்டுள்ளதால் அவ்வினங்களை ஒப்படைப்பு செய்யலாம்.

வரிசை எண்1,2 இனங்களை மறு ஏலம் நடத்தவும் வரிசை எண் 3,4,5 அதிக பட்சமாக ஏலத் தொகையினை குறிப்பிட்ட இனங்களை ஒப்படைப்பு செய்யவும் வரி வரிதிப்பு மற்றும் நிதிக்குழு **தீர்மானம் எண் 136 நாள் 25.02.2011ன்** ஒப்புதல் பெற்று மாமன்றத்திற்கு ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு அ, ஆ அனுமதிக்கலாம் ந.க.எண்.104/2011/அ1 (மே)

மாநகர மன்ற தீர்மானம் எண்.260 நாள் 28.02.2011

அலுவலகக்குறிப்பு 'அ' 'ஆ'அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் -7

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி - மேற்கு மண்டலம் - மேட்டுப்பாளையம் சாலை புதிய பேருந்து நிலையத்தில் உள்ள வருடாந்திர குத்தகை மற்றும் மாதாந்திர உரிம இனங்களுக்கு 11.02.2011 அன்றும் 18.02.2011 அன்றும் நடைபெற்ற பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் உச்சக் கேள்விதாரர்களுக்கு இனங்களை ஒப்படைத்தல் மற்றும் மறு பொது மின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோருதல் - தொடர்பாக.

பார்வை : வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 137 நாள் 25.02.2011

----------

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் மேட்டுப்பாளையம் சாலை புதிய பேருந்து நிலையத்தில் உள்ள மாதாந்திர உரிம இனங்களுக்கு 11.02.2011 அன்றும் 18.02.2011 அன்றும் நடைபெற்ற பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் கீழ்கண்ட இனங்களுக்கு

வ.எண். 1. மேட்டுப்பாளையம் ரோடு பேருந்து நிலையத்தில் வலதுபுறம் உள்ள சுமார் 431 சதுரடி கட்டமைப்பு வணிகம் மற்றும் அலுவலக கட்டிடம் (மாதாந்திர வாடகை அடிப்படையில்)

| வ.எண். | பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட மாதாந்திர உரிம தொகை | மாதாந்திர உரிம கட்டணம் உச்ச கேள்வி | | உயர்ந்தபட்ச ஏலம் ஒப்பந்தபுள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| | | | மின் ஏலத் தொகை ரூ. | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | |
| 1 | எம்.செல்வம் | 17955 | 22,500 | 21,600 | 22,500 |
| 2 | P.கார்த்திகேயன் | 17955 | ---- | ---- | ---- |
| 3 | S.முகம்மது ரபீக் | 17955 | ---- | ---- | ---- |
| 4 | V.K.ரஹமத்துள்ளா | 17955 | ---- | ---- | ---- |
| 5 | P. குருசாமி | 17955 | 18,200 | ---- | ---- |
| 6 | M.A. கலீல் ரஹ்மான் | 17955 | ---- | 18,700 | ---- |
| 7 | ஜெமீலாபேகம் | 17955 | ---- | ---- | ---- |
| 8 | P.கமலாவதி | 17955 | ---- | ---- | ---- |
| 9 | M.ராஜ்குமார் | 17955 | ---- | ---- | ---- |

வ. எண். 1-ல் கண்ட இனத்திற்கு அரசு நிர்ணயிக்கப்பட்ட மாதாந்திர உரிம தொகையினை விட உயர்ந்த பட்ச கேள்விதாரர் திரு.எம்.செல்வம் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யலாம்.

வ. எண். 2. மேட்டுப்பாளையம் சாலை பேருந்து நிலையத்தில் இரு சக்கர வாகனம் மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் (முதல் தளத்தில் 10 x 10 என்ற அளவில் வாகன கட்டுப்பாட்டு அறையுடன் - வருடாந்திர அடிப்படையில்).

| வ.எண். | பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட மாதாந்திர உரிம தொகை | மாதாந்திர உரிம கட்டணம் உச்ச கேள்வி | | உயர்ந்தபட்ச ஏலம் ஒப்பந்தபுள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| | | | மின் ஏலத் தொகை ரூ. | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | |
| 1 | P. குருசாமி | 1523550 | ---- | ---- | ---- |
| 2 | P.A. உசேன் | 1523550 | ---- | 1550000 | ---- |
| 3 | M.A. கலீல் ரஹ்மான் | 1523550 | 2000000 | 2020200 | 2020200 |
| 4 | O.A. சைய்யது இப்ராகிம் | 1523550 | ---- | 1500000 | ---- |
| 5 | V.K.ரஹமத்துள்ளா | 1523550 | ---- | ---- | ---- |
| 6 | M.ஹரிகிருஷ்ணன் | 1523550 | ---- | ---- | ---- |
| 7 | L.N. சைய்யது இப்ராகிம் | 1523550 | ---- | 1616161 | ---- |
| 8 | S.காளியப்பன் | 1523550 | ---- | ---- | ---- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | ஜெமீலாபேகம் | 1523550 | ---- | ---- | ---- |
| 10 | G.ரங்ககராஜ் | 1523550 | ---- | ---- | ---- |
| 11 | R.பிரபு | 1523550 | ---- | ---- | ---- |
| 12 | J.சுதாகர் | 1523550 | ---- | 1700999 | ---- |
| 13 | M.ராஜ்குமார் | 1523550 | ---- | 1456000 | ---- |
| 14 | A.வெங்கடேஷ் | 1523550 | ---- | ---- | ---- |
| 15 | V.மணிவண்ணன் | 1523550 | ---- | 1908999 | ---- |
| 16 | S.முகம்மது ரபீக் | 1523550 | ---- | 1600000 | ---- |
| 17 | P.முகம்மது ரபீக் | 1523550 | ---- | ---- | ---- |
| 18 | சபீர் அலி | 1523550 | ---- | ---- | ---- |

வ. எண். 2. கண்ட இனத்திற்கு அரசு நிா்ணயிக்கப்பட்ட மாதாந்திர உரிம தொகையினை விட உயர்ந்த பட்ச கேள்விதாரா் திரு.M.A.கலீல்ரஹ்மான் அவா்களுக்கு ஒதுக்கீடு செய்யலாம்.

வ.எண். 3. பேருந்து நிலையத்தில் தரைதளத்தில் 1750 சதுரடி கட்டமைப்பு வணிகம் மற்றும் அலுவலக உபயோகத்திற்கு

| வ.எண். | பெயர் | நிர்ணயம் செய்யப் பட்ட மாதாந்திர உரிம தொகை | மாதாந்திர உரிம கட்டணம் உச்ச கேள்வி | | உயர்ந்தபட்ச ஏலம் ஒப்பந்தபுள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| | | | மின் ஏலத் தொகை ரூ. | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | |
| 1 | A.N.பேக்ஸ் | 33200 | ---- | 27,000 | 27,000 |
| 2 | C.செல்வம் | 33200 | ---- | 15,000 | |
| 3 | M.A. கலீல் ரஹ்மான் | 33200 | ---- | 22,500 | |

வ.எண். 3-ல் கண்ட இனத்திற்கு அரசு நிா்ணயிக்கப்பட்ட மாதாந்திர உரிம தொகை ரூ.33,200/-க்கு 25.01.11, 09.02.11 மற்றும் 18.02.11 ஆகிய தேதிகளில் மின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில் அரசு மதிப்பிற்கு குறைவாக அதிக பட்ச தொகையாக ரூ.27000- ஏலதாரா் கோரியுள்ளதால் மேற்படி இனத்தினை உரிமம் ஒப்படைப்பு செய்வது தொடா்பாக வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் முடிவிற்கு பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

வ. எண். 4. பேருந்து நிலையம் இரண்டாம் தளத்தில் 6580 சதுரடி அளவுள்ள G.I. சீட் கட்டமைப்பு வணிக மற்றும் அலுவலக உபயோகத்திற்கு இனத்திற்கு யாரும் கலந்துக் கொள்ளாததால் இதனை மறு ஏலம் கொண்டு வரலாம்.

வ.எண்.1 மற்றும் 2 ஆகிய இனங்களை ஒப்படைப்பு செய்யவும் வ.எண்.3-ல் உள்ள இனத்தினை வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் முடிவிற்கும் மற்றும் வ.எண்.4 –னை மறு ஏலத்திற்கு கொண்டு வரவும் வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மானம் எண் 137 நாள் 25.02.2011ல்

அ. வரிசை எண் 1, மற்றும் 2 அனுமதித்து மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீா்மானிக்கப்பட்டது.

ஆ. வரிசை எண். 3 க்கு மூன்றாவது முறையாக ஏலம் நடத்தப்பட்டுள்ளதாலும், மாநகராட்சிக்கு வருவாய் இழப்பினை தவிா்க்கும் பொருட்டும் மாநகராட்சியால் நிா்ணயம் செய்யப்பட்ட தொகையினை விட குறைவாக பெறப்பட்டிருப்பினும் உரிமம் ஒதுக்கீடு செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீா்மானிக்கப்பட்டது.

இ. வரிசை எண் 4 இனத்திற்கு மறுஏலம் கோர பரிந்துரை செய்து தீா்மானிக்கப்பட்டது.

அலுவலகக் குறிப்பு-அ,ஆ,இ அனுமதிக்கலாம் ந.க.எண்.10070/2010/அ1(மே)

<u>மாநகர மன்ற தீா்மானம் எண்.261 நாள் 28.02.2011</u>

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீா்மானம் எண்.137 நாள் 25.02.2011ஐ ஏற்று அலுவலகக்குறிப்பு ‘அ’ ‘ஆ’ ‘இ’ அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

---

பொருள் எண் -8

பொருள் கோயம்புத்தூா் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - சுப்ரி வீதி மறறும் கிருஷ்ணசாமி ரோடு கடைகளுக்கான ஏலம் 25.01.11 அன்றும் -பன்னீா்செல்வம் பூமாா்க்கெட் மேடைக் கடைகள் 18.02.2011 அன்றும் மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 17.02.2011 அன்று பெறப்பட்டதில் – உச்சக் கேள்விதாரா்களுக்கு கடைகள் ஒப்படைத்தல் மற்றும் ஏலம் கோரப்படாத இனங்களை் மறு பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் - தொடா்பாக.

பாா்வை : வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மானம் எண் 138 நாள் 25.02.2011

-------------

கோயம்புத்தூா் மாநகராட்சி மேற்கு மண்டலம் சுப்ரி வீதி மறறும் கிருஷ்ணசாமி ரோடு கடைகளுக்கான மின் ஏலம் 25.01.11 அன்றும் பன்னீா்செல்வம் பூமாா்க்கெட் மேடைக் கடைகள் 18.02.2011 அன்றும் 17.02.2011 அன்றும் மின் ஏலம் மற்றும் மின் ஒப்பந்தப்புள்ளி நடை பெற்றதில் அதன் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள உயா்ந்த பட்ச மாத உரிமம் தொகை கோரப்பட்டுள்ளது.

**அ. சுப்ரி வீதி கடை**

| வ. எண் | கடை எண். | பெயா் | நிா்ணயம் செய்யப்பட்ட மாதாந்திர வாடகை மதிப்பு | மாத வாடகை உச்ச கேள்வி தொகை | | உயா்ந்த பட்ச ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|---|---|
| | | | | மின் ஏலத் தொகை ரூ. | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | |
| 1 | 4A | எஸ். தீப் ஆனந்த் | 2500 | 3210 | 3000 | 3210 |
| 2 | 4A | ஏ.பி.சண்முகம் | 2500 | - | 2800 | - |

மேற்படி சுப்ரி வீதி கடை எண்.4A-க்கு மாநகராட்சியால் நிா்ணயம் செய்யப்பட்ட மதிப்பைக்-காட்டிலும் மின் ஏலத்தில் கோரப்பட்டுள்ள உயா்ந்த பட்ச மின் ஏலக் கேள்விதாரரான **திரு.எஸ்.தீப் ஆனந்த்** என்பவருக்கு உரிமம் ஒதுக்கீடு செய்யலாம்

**ஆ. கிருஷ்ணசாமி ரோடு கடை (வடக்கு)**

| வ. எண் | கடை எண். | பெயா் | நிா்ணயம் செய்யப்பட்ட மாதாந்திர வாடகை மதிப்பு | மாத வாடகை உச்ச கேள்வி தொகை | | உயா்ந்த பட்ச ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|---|---|
| | | | | மின் ஏலத் தொகை ரூ. | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | |
| 1 | 4 | ஏ.எம். நாசா் அலி | 2500 | 2700 | - | 2700 |
| 2 | 4 | எம்.மகுடபதி | 2500 | - | - | - |

மேற்படி கிருஷ்ணசாமி ரோடு (வடக்கு) கடை எண். 4 க்கு மாநகராட்சியால் நிா்ணயம் செய்யப்பட்ட மதிப்பைக்காட்டிலும் மின் ஏலத்தில் கோரப்பட்டுள்ள உயா்ந்தபட்ச மின் ஏலக் கேள்விதாரா் **திரு.ஏ.எம். நாசா் அலி** என்பவருக்கு உரிமம் ஒதுக்கீடு செய்யலாம்

**இ. பன்னீர் செல்வம் மேடைக் கடைகள்**

| வ. எண் | கடை எண். | ஏலதாரர் பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட மாதாந்திர உரிம மதிப்பு | மாத உரிம கட்டணம் உச்ச கேள்வி தொடர்பாக | | உயர்ந்த பட்ச ஏலம் / ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|---|---|---|
| | | | | மின் ஏலத் தொகை ரூ. | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | |
| 1 | B9 | என். ரவி | 430 | 500 | 705 | 705 |
| | B9 | பி.சுமதி | 430 | - | - | - |
| | B9 | எஸ். காஜா உசேன் | 430 | - | - | - |
| | B9 | ஏ.அபுதாகிர் | 430 | | 700 | |
| 2 | B15 | என்.ரவி | 275 | - | 305 | - |
| | B15 | வி.சண்முகம் | 275 | - | - | - |
| | B15 | எஸ்.செல்வகுமார் | 275 | - | - | - |
| | B15 | ஏ.நாகராஜன் | 275 | 300 | 150 | |
| | B15 | கே.லோகநாதன் | 275 | | 600 | 600 |
| 3 | E42 | எஸ். யோகேஷ் | 410 | - | 600 | 600 |
| | E42 | எஸ்.செல்வகுமார் | 410 | - | - | - |
| | E42 | கே.கே.அய்யப்பன் | 410 | - | - | - |
| | E42 | எஸ். ராஜா | 410 | - | - | - |

கடை எண்கள் B9 க்கு உயர்ந்த பட்ச ஏல கேள்வித் தொகை கோரிய **திரு.என்.ரவி** அவர்களுக்கு ஒப்படை செய்யவும் B15 க்கு உயர்ந்த பட்ச ஏல கேள்வித் தொகை கோரிய **திரு. கே.லோகநாதன்** அவர்களுக்கு ஒப்படை செய்யவும் மற்றும் E42 க்கு உயர்ந்த பட்ச ஏல கேள்வித் தொகை கோரிய **திரு.எஸ்.யோகேஷ்** அவர்களுக்கு ஒப்படை செய்யலாம்

**ஈ.** மறு ஏலத்தில் / ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்துகொள்ளாத கடைகள் விபரம் F67/ F70/ F72 G85/ G86 G87 H93 H94 H98 ஆகிய கடைகளுக்கு ஒருவரும் ஏலத்தில் கலந்து கொள்ளாததால் மறு ஏலத்தில் கொண்டு வரலாம்.

**'அ'** முதல் **'இ'** வரை உள்ள இனங்களை ஏலதாரர்களுக்கு ஒப்படை செய்யலாம் மற்றும் **'ஈ'** –ல் குறிப்பிடப்பட்டுள்ள மேடைக் கடைகளை மறு ஏலம் கொண்டு வரவும் வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 138 நாள் 25.02.2011ல் ஒப்புதல் பெற்று மாமன்றத்திற்கு ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு அனுமதிக்கலாம். ந.க.எண்.5024/2006/அ1(மே)

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.262 நாள் 28.02.2011</u>

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண்.138 நாள் 25.02.2011ஐ ஏற்று அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது

---

பொருள் எண் 9

பார்வை – வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 145 நாள் 25.02.2011

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண். 41 எல்.ஜி.தோட்டப் பகுதியில் 1722 ச.அடி பரப்பளவுள்ள சமுதாய கூடம் ரூ.33 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி சமுதாய கூடத்திற்கு பொது பணித்துறை வாடகை மதிப்பாக நாள் ஒன்றுக்கு ரூ.1700/- என உதவி பொறியாளர் மூலம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

எனவே மேற்படி பொதுபணித்துறை வாடகையை நிர்ணயம் செய்து பொதுமக்களின் பயன்பாட்டிற்காக சமுதாய கூடத்தை ஒதுக்கீடு செய்வது குறித்து முடிவு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிகுழுவின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்பட்டதில், பார்வையில் காணும் தீர்மானத்தில், சமுதாயக்கூடம் ஏழை மக்கள் வாழும் பகுதியில் இருப்பதாலும், உபயோகிப்பவர்கள் ஏழை மக்களாக இருப்பதாலும், தின வாடகையாக ரூ. 1500- நிர்ணயம் செய்து மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. எனவே மாமன்றத்தின் ஒப்புதலுக்காக பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்** **ந.க.எண்.1392/2011 அ1/தெ**

---

மாநகர மன்ற தீர்மானம் எண்.263 நாள் 28.02.2011

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண்.145 நாள் 25.02.2011ஐ ஏற்று அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

பொருள் எண் 10

**பார்வை – வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 146 நாள் 25.02.2011**

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண். 41 சிலேட்டர் ஹவுஸ் சாலையில் 2227 ச.அடி பரப்பளவுள்ள சமுதாய கூடம் ரூ.10 இலட்சம் செலவில் செப்பனிட்டு கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி சமுதாய கூடத்திற்கு பொது பணித்துறை வாடகை மதிப்பாக நாள் ஒன்றுக்கு ரூ.1200/- என உதவி பொறியாளர் மூலம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

எனவே மேற்படி பொதுபணித்துறை வாடகையை நிர்ணயம் செய்து பொதுமக்களின் பயன்பாட்டிற்காக சமுதாய கூடத்தை ஒதுக்கீடு செய்வது குறித்து முடிவு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிகுழுவின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்பட்டதில், பார்வையில் காணும் தீர்மானத்தில், சமுதாயக்கூடம் ஏழை மக்கள் வாழும் பகுதியில் இருப்பதாலும், உபயோகிப்பவர்கள் ஏழை மக்களாக இருப்பதாலும், தின வாடகையாக ரூ. 1000- நிர்ணயம் செய்து மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. எனவே மாமன்றத்தின் ஒப்புதலுக்காக பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம்** **ந.க.எண்.1391/2011 அ1/தெ**

மாநகர மன்ற தீர்மானம் எண்.264 நாள் 28.02.2011

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண்.146 நாள் 25.02.2011ஐ ஏற்று அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

பொருள் எண் -11

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சியில் டெக்ஸ்கோ நிறுவனத்தினர் மூலம் **01.04..2011** முதல் **31.03.2012** முடிய ஓராண்டு காலத்திற்கு டெக்ஸ்கோ ஓட்டுநர்களை தினக்கூலி அடிப்படையில் பணிபுரிய ஒப்பந்தம் நீட்டிப்பு செய்தல் - தொடர்பாக

* * * * * * *

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ஒப்பந்த தினக்கூலி அடிப்படையில் **24** டெக்ஸ்கோ ஓட்டுநர்களை நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ஊதியம் ரூ.**8405/-**ம் அதற்கான சேவைக்கட்டணம் **12%** அதற்குரிய சேவைவரிகட்டணம் **12%**, கல்விவரிக்கட்டணம் **3%** வழங்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். இந்த ஒப்பந்த காலம் **31.03.2011** உடன் முடிவடைகிறது.

தற்பொழுது ஓட்டுநர்களை நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ஊதியம் ரூ.**8405/–** ,அதற்கான சேவைக்கட்டணம் **12%** அதற்குரிய சேவைவரிக் கட்டணம் **10..3%**, கல்விவரிக்கட்டணம் **10%** வழங்குமாறு கோரியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து டெக்ஸ்கோ நிறுவனத்தினர் மேற்படி ஒப்பந்தத்தை **01.04.2011** முதல் **31.03.2011** முடிய மேலும் ஓராண்டு காலத்திற்கு நீட்டிக்கும் பொருட்டு விருப்பம் தெரிவித்துள்ளனர். அதில் ஓட்டுநர் ஒருவருக்கு **8** மணி நேர பணிக்கு தினக்கூலி அடிப்படையில் மாத ஊதியம் ரூ. **10383/-** (சேவைக்கட்டணம் **12%** மற்றும் அதற்குரிய சேவைவரிக்கட்டணம் **10.03%** உட்பட) மேற்குறிப்பிட்ட காலத்திற்கு வழங்குமாறு அவர்களது கடித எண். **801**/CMC/CBE/2011-12 நாள்.**17.02.2011**ல் கேட்டுக் கொ1ண்டுள்ளனர்.

இம்மாநகராட்சியில் **24** டெக்ஸ்கோ ஓட்டுநர்கள் பணிபுரிந்து வருகின்றனர். எனவே தற்போது அவர்கள் கேட்டுக்கொண்டுள்ள கட்டண விகிதத்தில் **24** டெக்ஸ்கோ ஓட்டுநர்களை ஏற்கனவே உள்ள பொது நிபந்தனைகளுக்குட்பட்டு **01.04.2011** முதல் **31.03.2012** முடிய உள்ள ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்தமுறையில் பணிபுரிய ஆகும் உத்தேச செலவினம் ரூ. **29,90,304**க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** அனுமதிக்கலாம் **எண். 7480/2010/எம்சி7**

மாநகர மன்ற தீர்மானம் எண்.265 நாள் 28.02.2011

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது

---

பொருள் எண் -12

பார்வை – வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 148 நாள் 25.02.2011

பொருள் - கோயம்புத்தர் மாநகராட்சி – தெற்கு மண்டலம் - உக்கடம் புதிய மீன் மார்க்கெட் கடைகள் மின் ஏலம் முலம் ஒப்பந்தப்புள்ளி கோரியது – கடைகள் ஒதுக்கீடு செய்வது சம்மந்தமாக.

- - - - - -

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட உக்கடம் பைபாஸ் ரோட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள 66 மீன், கருவாடு மற்றும் ஆட்டிறைச்சி கடைகளில் ஏற்கனவே ஏலம் கோராப்பட்டு உரிமைதாரர்களுக்கு ஒப்படைச் செய்யப்பட்ட கடைகள் நீங்கலாக மீதமுள்ள கீழ்கண்ட கடைகளுக்கு மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 17.02.2011ம் தேதியன்று நடைபெற்றது. இதில் கீழ் குறிப்பிட்ப்பட்டுள்ள கடைகளுக்கு அதன் எதிரே குறிப்பிடப்பட்டுள்ளவாறு உயர்ந்த பட்ச மாத வாடகை கோரப்பட்டுள்ளது.

1. மீன் கடைகள்

| வ. எண். | பெயர் (திருவாளர்கள்) | இனம் | கடை எண் | மின் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி | மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 01 | திரு.சிவபாலன் | மீன் கடை | 1 | ஒப்பந்தப்புள்ளி | 36,300/- |
| 02 | திருமதி.கமலா | மீன் கடை | 32 | ஒப்பந்தப்புள்ளி | 11,555/- |
| | திரு.கலில்ரஹ்மான் | | | ஒப்பந்தப்புள்ளி | 11,000/- |

மேற்படி, இரு கடைகளுக்கு மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட அரசு மதிப்பு மாத வாடகை விட கூடுதலாக பெறப்பட்டுள்ளது. இதில் கடை எண்.1க்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி (Single Tender) பெறப்பட்டுள்ளது. எனவே உயர்ந்தபட்ச ஏல கோரிக்கை பெறப்பட்டுள்ள மேற்படி 2 கடைகளை ஒப்படைப்பு செய்வது குறித்து முடிவு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிகுழுவிற்கு பொருள் வைக்கப்பட்டு பார்வையில் காணும் தீர்மானத்தில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. எனவே மன்றத்தின் ஒப்புதலுக்காக பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு - அனுமதிக்கலாம் (ந.க.எண். 4006 / 2010 / அ1)

## மாநகர மன்ற தீர்மானம் எண்.266 நாள் 28.02.2011

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண்.148 நாள் 25.02.2011ஐ ஏற்று அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

பொருள் எண் 13

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் சீனிவாசபுரம் மாநகராட்சி திருமண மண்டபம், மாமன்ற தீர்மான எண் 239, நாள் 18.02.10ன்படி 10.4.2010 முதல் துறை மூலம் வசூல் மேற்கொள்ளப்பட்டது.

விழாக்கள் நடத்த மார்ச் 2011 வரை பதிவு செய்யப்பட்டுள்ளது. கண்காணிப்பு பொறியாளர் மேற்கண்ட திருமண மண்டபம் உள்ள இடத்தில் பலமாடி வாகனம் நிறுத்துமிடம் அமைக்க நடவடிக்கைகள் துவங்க கால தாமதம் ஏற்படுமென்பதால் இப்பகுதியில் உள்ள மாநகராட்சி திருமண மண்டபத்தை நடைமுறையில் உள்ள நிபந்தனைகளின்படி பொது ஏலம் விட நடவடிக்கை மேற்கொள்ளலாமென தெரிவித்ததுள்ளார்.

எனவே மேற்படி திருமண மண்டபம் பொதுஏலம் மூலம் ஒதுக்கீடு செய்யவும் அதற்கான விளம்பர செலவினங்களை ஏற்கவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி பெற வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் 25.02.2011-ம் தேதிய தீர்மான எண்.141-ல் ஒப்புதல் அளித்து தீர்மானித்துள்ளதை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்: 13081/2003/அ4 (வ)**

## மாநகர மன்ற தீர்மானம் எண்.267 நாள் 28.02.2011

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண்.141 நாள் 25.02.2011ஐ ஏற்று அலுவலகக்குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

பொருள் எண் 14

பார்வை – வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 143 நாள் 25.02.2011

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பட்டியலில் கண்ட குத்தகை இனங்களுக்கு 17.02.2011 மற்றும் 23.02.11 தேதியில் நடைபெற்ற மின் ஏலம் மற்றும் ஒப்புந்தப்புள்ளியில் கீழ் குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு அதன் எதிரே குறிப்பிட்டுள்ளவாறு உயர்ந்த பட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொகை பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | இனம் | அரசு மதிப்பு (மூன்றாண்டு சராசரி) ரூ. | 31.01.2011 ஏலத்தன்று பெறப்பட்ட உயர்ந்த பட்ச தொகை மற்றும் ஏலத்தாரர் பெயர் ரூ | 09.02.2011 ஏலத்தன்று பெறப்பட்ட உயர்ந்த பட்ச தொகை மற்றும் ஏலத்தாரர் பெயர் ரூ | 17.02.11 ஏலத்தன்று உயர்ந்தபட்ச கேள்வி தொகை மற்றும் ஏலதாரர் பெயர் ரூ | 23.02.11 ஏலத்தன்று உயர்ந்த பட்ச கேள்வி தொகை மற்றும் ஏலதாரர் பெயர் ரூ |
|---|---|---|---|---|---|---|
| 1 | வ.உ.சி.பூங்கா சிறுவர் ரயில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 4,67,000/- | 1,71,000/- திரு.கே. ரமேஷ் | 1,77,777/- திரு.எஸ். கிருஷ்ணன் | 1,81,188/- திரு. கே.ரமேஷ் | - |
| 2 | போத்தனூர் ரோடு லாரிப் பேட்டையில் லாரிகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 9,69,000/- | 6,66,666/- திரு.எம்.ஏ. கலீல் ரகுமான் | 6,70,768/- திரு.எஸ். முகமது ரபீக் | 8,25,555/- திரு. பி.ஏ.உசேன் | - |
| 3 | தியாகி குமரன் மார்க்கெட் உட்புரத்தில் உள்ள இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 20,22,000/- | 12,65,000/- திரு.எம். ராஜ்குமார் | 14,60,000/- திரு.என். ரகோத்தமன் | 15,10,000/- திரு.டி. முகமது ரபீக் | - |
| 4 | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையத்தில் தரைதள கேரேஜ் பகுதி மற்றும் 5-வது தளப்பகுதியில் சைக்கிள் மற்றும் இரு சக்கர வாகன நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 18,49,000/- | ------- ஏலதாரார் யாரும் பங்கேற்கவில் லை | 12,12,122/- திரு. வெங்கடேஷ் | 18,40,000/- திரு.ஏ. வெங்கடேஷ் | - |
| 5 | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் பேருந்து நுழைவு கட்டணம் | 20,72,000/- | ஏலதாரார் யாரும் பங்கேற்க வில்லை | ஏலதாரார் யாரும் பங்கேற்க வில்லை | 13,01,000/- திரு.ஹரி கிருஷ்ணன் | - |
| 6 | காந்திபுரம் நகர பேருந்து நிலையம் உட்புறம் உள்ள நவீன கட்டண கழிப்பிடம் | 10,31,000/- | 4,51,000/- திருமதி. கலாவதி | 5,55,000/- திரு.எஸ். வேலுச்சாமி | 8,10,999/- திரு.கே.மணி வண்ணன் | 8,73,000/- திரு.எஸ் .வேலுச்சாமி |
| 7 | குருஹோட்டல் அருகில் நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 10, 33,000/- | 8,00,000/- திரு.எம்.அ ரவிந்த் | 8,10,000/- திரு.கனகராஜ் | 8,51,499/- திரு.கே.மணி வண்ணன் | 9,12,000/- எஸ். கனகராஜ் |

மேற்படி குத்தகை இனங்களுக்கு ஏற்கனவே கடந்த மூன்று முறை ஏலம் கோரப்பட்டும் பட்டியலில் கண்ட ஏலத்தொகையே அதிகபட்ச தொகையாக கோரப்பட்டுள்ளது. மேலும் இதற்கும் அதிகமாக ஏல கோரிக்கை கோர வாய்ப்பு குறைவாக இருப்பதால் மேற்படி குத்தகை இனங்களை ஊர்ஜிதம் செய்து ஏலதார்களுக்கு ஒப்படைச் செய்வது குறித்து முடிவு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில், பார்வையில் கண்ட தீர்மானத்தில், வரிசை எண் 1-ல் கண்ட இனத்திற்கு மறுஏலம் கோரலாம் எனவும், மூன்றாவது முறையாக ஏலம் நடத்தப்பட்டுள்ளதாலும் வருமான இழப்பினை தவிர்க்கும் பொருட்டும், வரிசை எண் 2, 3, 4, 5, 6, 7 க்கு பெறப்பட்ட உயர்ந்தபட்ச ஏலக் கோரிக்கையினை ஏற்று ஒப்படை செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் ஒப்புதலுக்காக பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u> அனுமதிக்கலாம் ந.க.எண்.9659/10/அ1

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.268 நாள் 28.02.2011</u>

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண்.143 நாள் 25.02.2011ஐ ஏற்று அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 15

பார்வை : 1. அரசு ஆணை எண். 92.ந.நி.ம கு.வ. துறைநாள் 03.07.07
2. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 144 நாள் 25.02.2011

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட தியாகி குமரன் மார்க்கெட் மற்றும் அவினாசி சாலை, மாநகராட்சி வணிக வளாகத்தில் உள்ள கீழ்குறிப்பட்டுள்ள கடைகளின் தற்போதைய அனுபோகதாரர்கள் மேற்படி கடைகளின் உரிமத்தினை பார்வையில் கண்ட அரசு ஆணையின்படி தங்களது பெயருக்கு பெயர் மாற்றம் செய்து தருமாறும் அதற்குண்டான கட்டணங்களை செலுத்தியும் விண்ணப்பங்கள் அளித்துள்ளனர்.

| வ. எண் | கடை எண் | முந்தைய உரிமம் தாரர் பெயர் | தற்போதைய அனுபோகதாரர் பெயர் | ஒரு வருட கட்டணம் ரூ. | வைப்புத் தொகை ரூ. | பெயர் மாற்ற கட்டணம் ரூ | இரசீது எண். நாள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | D-3 | N.அப்துல் கரீம் | S. ராஜேந்திரன் | 2482/- | 2482/- | ரூ.550/- | 0624-0628/ 04.02.11 |
| 2 | P-132 | A.ராமைய்யா | U. ரியாஸ்தீன் | 3942/- | 3942/- | ரூ.550/- | 0768-0779 / 02.02.11 |
| 3 | P-154 | சச்சிதானந்தம் பிள்ளை | G.M. பூர்ணசந்திரன் | 28470/- | 28470/- | ரூ.550/- | 4035/ 02.02.11 |
| 4. | P 156-A | R.நஞ்சப்பன் | A. பஷீர் | 10074/- | 10074/- | ரூ.550/- | 0658/ 02.02.11 |
| 5. | P – 198 | அப்துல் கபூர் | P. சுப்பிரமணியன் | 8541/- | 8541/- | ரூ.550/- | 0716 / 04.02.11 |
| 6. | P - 196 | M. கபூர் | A. சுபாஸ் | 8541/- | 8541/- | ரூ.550/- | 0701 / 02.02.11 |
| 7. | P-129 | L.A..மைதீன் | M. செல்வமணி w/o. முத்துராஜ் | 4161/- | 4161/- | ரூ.550/- | 0931-0941/ 02.02.11 |
| 8. | P - 130 | அப்துல் முத்தலீப் | M. செல்வமணி w/o. முத்துராஜ் | 4380/- | 4380/- | ரூ.550/- | 0876-0881/ 02.02.11 |
| 9. | P-203 | M.M..முஸ்தபா | M. முகமது ரபி | வாரிசுதாரர் | வாரிசுதாரர் | ரூ.550/- | 0903 / 02.02.11 |
| 10. | P - 199 | S.ரங்கசாமி தேவர் | R. முருகேசன் | வாரிசுதாரர் | வாரிசுதாரர் | ரூ.550/- | 2326 / 10.02.11 |
| 11. | P-200 | A.M..அப்துல் காதர் | A.K. தாஜ்தீன் | வாரிசுதாரர் | வாரிசுதாரர் | ரூ.550/- | 2220 / 10.02.11 |
| 12. | P-201 | G.கணேஷ் செட்டியார் | G. வெங்கடாசலம் | வாரிசுதாரர் | வாரிசுதாரர் | ரூ.550/-/ | 2343/ 10.02.11 |
| 13. | B-1 | கிருஷ்ணம்மாள் | ஜெயலட்சுமி | வாரிசுதாரர் | வாரிசுதாரர் | ரூ.550/- | 0708 / 15.02.11 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 14. | P-165 | முகமது மொய்தீன் | C.K.ஜெயக்குமார் | | வாரிசுதாரர் | ரூ.550/- | 0472 / 17.02.11 |
| 15. | P-102 | ஆனந்தன் செட்டியார் | S. கிரிதர் | வாரிசுதாரர் | வாரிசுதாரர் | ரூ.550/- | 1386 / 08.02.11 |
| 16. | P-4 | M.V.பாலகிருஷ்ணன் | M.B. கோபால் | வாரிசுதாரர் | வாரிசுதாரர் | ரூ.550/- | 1422 / 08.02.11 |
| 17. | P-16 | R.S.கோபால் செட்டியார் | S. பாலாஜி<br>S அருண்பிரசாத் | வாரிசுதாரர் | வாரிசுதாரர் | ரூ.550/- | 1376 / 08.02.11 |
| 18. | P-24 | R.ராஜரத்தினம்<br>R.தூலரகநாதன் | D. சுதர்ஸன் | வாரிசுதாரர் | வாரிசுதாரர் | ரூ.550/- | 1441 / 08.02.11 |
| 19 | P-19 | V.B.கோவிந்தராஜீலு | V.G. பண்டரிநாதன் | வாரிசுதாரர் | வாரிசுதாரர் | ரூ.550/- | 1539 / 08.02.11 |
| 20 | P-11 | A.B.கிருஷ்ண செட்டியார் | K. விஜயகுமார் | வாரிசுதாரர் | வாரிசுதாரர் | ரூ.550/- | 1552 / 08.02.11 |
| 21 | P-18 | E.R.ராமலிங்கம் செட்டியார் | D. ஸ்ரீ காந்த்<br>D. ஸ்ரீனிவாசன் | வாரிசுதாரர் | வாரிசுதாரர் | ரூ.550/- | 1581/ 08.02.11 |
| 22 | P-23 | R.ஜெகந்நாதன்<br>R.ரகுநாதன் | J. மோகன் ராஜ்,<br>R. ராமலிங்கம்<br>J. சுகுமார் | வாரிசுதாரர் | வாரிசுதாரர் | ரூ.550/- | 1524/ 08.02.11 |
| 23 | P-26 | S.கிருஷ்ணன் | K. ரமேஷ் | வாரிசுதாரர் | வாரிசுதாரர் | ரூ.550/- | 1506/ 08.02.11 |
| 24 | P-25 | B.M.வெங்கட கோபால் செட்டியார் | B.V. சேகர் | வாரிசுதாரர் | வாரிசுதாரர் | ரூ.550/- | 1471/ 08.02.11 |
| 25 | P - 79-80 | A.P.விஸ்வநாத செட்டியார் | V. நாகேந்திரன் | வாரிசுதாரர் | வாரிசுதாரர் | ரூ.550/- | 1704/ 08.02.11 |
| 26 | P-81 | K.தண்டபாணி | V. சித்ரா | வாரிசுதாரர் | வாரிசுதாரர் | ரூ.550/- | 1045/ 10.02.11 |
| 27 | P-22 | ராமதாஸ் & பிரதர்ஸ் | L. ஸ்ரீனிவாசன் | வாரிசுதாரர் | வாரிசுதாரர் | ரூ.550/- | 1251 / 15.02.11 |
| 28 | P-15 | C.S.வெங்கடாசலம் | C.S. விஜயகுமார் | வாரிசுதாரர் | வாரிசுதாரர் | ரூ.550/- | 1776/ 15.02.11 |
| 29 | P-5 | B.M.நரசிம்ம செட்டியார் | B.R. கமல்நாதன் | வாரிசுதாரர் | வாரிசுதாரர் | ரூ.550/- | 2318/ 11.02.11 |
| 30 | P-77-78 | ரசூல் ராவுத்தூர் | திருமதி.சாயிராபானு | வாரிசுதாரர் | வாரிசுதாரர் | ரூ.550/- | 2352/ 10.02.11 |
| 31 | P-32 | V. ராதாகிருஷ்ணன் செட்டியார் | R. செல்வரங்கன் | வாரிசுதாரர் | வாரிசுதாரர் | ரூ.550/- | 0425/ 21.02.11 |
| 32 | P-62 | R. கிருஷ்ணராஜ் | R. நடராஜ் | வாரிசுதாரர் | வாரிசுதாரர் | ரூ.550/- | 0423/ 21.02.11 |
| 33 | P-20 | குப்புபர்வதவர்த்தினி | R. பாலவினோதினி | வாரிசுதாரர் | வாரிசுதாரர் | ரூ.550/- | 0308/ 21.02.11 |
| | அவினாசி ரோடு வணிக வளாகம் | | | | | | |
| 34. | 6 | A.P. ராஜேந்திரன் | கனகலதா<br>விமல்குமார் | 74,544 | 74,544 | ரூ.550/- | 1850-1853/ 22.02.11 |
| 35. | 11 | அண்ணா தொழில் கூட்டுறவு சங்கம் | N. பழனிசாமி | 53,412 | 53,412 | ரூ.550/- | 2976/ 11.02.11 |

மேற்குறிப்பிட்டுள்ள விவரப்படி பெயர்மாற்றம் செய்வதற்கான தொகையினை அரசாணையில் தெரிவந்துள்ளபடி செலுத்தியுள்ள மனுதாரர்களுக்கு மேற்படி கடைகளின் உரிமையினை பெயர்மாற்றம் செய்வதற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதிக்கு பொருள் வைக்கப்பட்டதில் பார்வையில் கண்ட தீர்மானத்தில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. எனவே மன்றத்தின் ஒப்புதலுக்காக பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம்** **ந.க.எண். 403 /11 / அ1 /**

மாநகர மன்ற தீர்மானம் எண்.269 நாள் 28.02.2011

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண்.144 நாள் 25.02.2011ஐ ஏற்று அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண் -16

பார்வை – வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 147 நாள் 25.02.2011

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட காந்திபுரம் மத்திய பேருந்து நிலைய தளம் எண். 1,2,3,4 முதல் மாடியில் உள்ள கடைகளுக்கு 23.02.2011 தேதியில் நடைபெற்ற மின் ஏலம் மற்றும் ஒப்புந்தப்புள்ளியில் கீழ் குறிப்பிட்டுள்ள கடைகளுக்கு அதன் எதிரே குறிப்பிட்டுள்ளவாறு உயர்ந்த பட்ச மாத வாடகை தொகை பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | கடை எண் தளம் எண். 1 | மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட பொது பணித்துறை மாத வாடகை ரூ. | ஏலதாரர் பெயர் திருவாளர்கள் | 23.02.2011 ஏலத்தன்று பெறப்பட்ட உயர்ந்தபட்ச மாத வாடகை தொகை ரூ. | ஒப்பந்தப் புள்ளி / மின்ஏலம் |
|---|---|---|---|---|---|
| 1 | 1 360 சதுர அடி | 9800/- | ஏ.டி.ராஜவேலு | 10,100/- | ஒப்பந்தப் புள்ளி |
| | | | செல்வி | 8500/- | ஒப்பந்தப் புள்ளி |
| | | | எம்.ஏ. கலீல் ரஹ்மான் | 5555/- | ஒப்பந்தப் புள்ளி |
| | | | இருதயராஜா | 6000/- | ஒப்பந்தப் புள்ளி |
| | | | எம்.ஏ. கலீல் ரஹ்மான் | 4444/- | ஒப்பந்தப் புள்ளி |
| 2 | 2 360 சதுர அடி | 9800/- | இருதயராஜா | 6000/- | ஒப்பந்தப் புள்ளி |
| | | | எம்.ஏ. கலீல் ரஹ்மான் | 5999/- | ஒப்பந்தப் புள்ளி |
| 3 | 3 360 சதுர அடி | 9800/- | இருதயராஜா | 6000/- | ஒப்பந்தப் புள்ளி |
| | | | மணிவண்ணன் | 4500/- | ஒப்பந்தப் புள்ளி |
| | | | செல்வம் | 7000/- | ஒப்பந்தப் புள்ளி |
| | | | சத்திய மூர்த்தி | 1000/- | ஒப்பந்தப் புள்ளி |
| 4 | 4 360 சதுர அடி | 9800/- | எம்.ஏ. கலீல் ரஹ்மான் | 6333/- | ஒப்பந்தப் புள்ளி |
| | | | இருதயராஜா | 4500/- | ஒப்பந்தப் புள்ளி |
| | | | மணிவண்ணன் | 4500/- | ஒப்பந்தப் புள்ளி |
| | | | ராஜ்குமார் | 2100/- | ஒப்பந்தப் புள்ளி |
| | | | மனோகரன் | 1500/- | ஒப்பந்தப் புள்ளி |
| 5 | 1 147 சதுர அடி | 4000/- | எம்.ஏ. கலீல் ரஹ்மான் | 2777/- | ஒப்பந்தப் புள்ளி |
| | | | செல்வம் | 4100/- | மின் ஏலம் |
| | | | இருதயராஜா | 3000/- | ஒப்பந்தப் புள்ளி |
| | | | மனோகரன் | 1600/- | ஒப்பந்தப் புள்ளி |
| | | | ராஜ்குமார் | 2050/- | ஒப்பந்தப் புள்ளி |
| | | | சத்தியமூர்த்தி | 1000/- | ஒப்பந்தப் புள்ளி |
| 6 | 2 147 சதுர அடி | 4000/- | எம்.ஏ. கலீல் ரஹ்மான் | 2888/- | ஒப்பந்தப் புள்ளி |
| | | | இருதயராஜா | 3000/- | ஒப்பந்தப் புள்ளி |
| | | | மணிவண்ணன் | 1620/- | ஒப்பந்தப் புள்ளி |
| | | | ராஜ்குமார் | 2000/- | ஒப்பந்தப் புள்ளி |
| | | | செல்வம் | 4100/- | மின் ஏலம் |
| 7 | 3 147 சதுர அடி | 4000/- | எம்.ஏ. கலீல் ரஹ்மான் | 2880/- | ஒப்பந்தப் புள்ளி |
| | | | இருதயராஜா | 3000/- | ஒப்பந்தப் புள்ளி |
| | | | ஹரிகிருஷ்ணன் | 4400/- | மின் ஏலம் |
| **8** | 4 147 சதுர அடி | 4000/- | எம்.ஏ. கலீல் ரஹ்மான் | 2999/- | ஒப்பந்தப் புள்ளி |
| | | | இருதயராஜா | 3000/- | ஒப்பந்தப் புள்ளி |
| | | | ஹரிகிருஷ்ணன் | 4400/- | மின் ஏலம் |
| **9** | 5 147 சதுர அடி | 4000/- | எம்.ஏ. கலீல் ரஹ்மான் | 2666/- | ஒப்பந்தப் புள்ளி |
| | | | இருதயராஜா | 3000/- | ஒப்பந்தப் புள்ளி |
| | | | ஹரிகிருஷ்ணன் | 2000/- | |
| **10** | 6 147 சதுர அடி | 4000/- | எம்.ஏ. கலீல் ரஹ்மான் | 2955/- | ஒப்பந்தப் புள்ளி |
| | | | இருதயராஜா | 3000/- | ஒப்பந்தப் புள்ளி |
| | | | ஹரிகிருஷ்ணன் | 2000/- | ஒப்பந்தப் புள்ளி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **11** | 7<br>147 சதுர அடி | 4000/- | எம்.ஏ. கலீல் ரஹ்மான் | 3222/- | ஒப்பந்தப் புள்ளி |
| | | | இருதயராஜா | 3000/- | ஒப்பந்தப் புள்ளி |
| | | | எஸ். ஷாஜகான் | 3160/- | ஒப்பந்தப் புள்ளி |
| **12** | 8<br>147 சதுர அடி | 4000/- | எம்.ஏ. கலீல் ரஹ்மான் | 3222/- | ஒப்பந்தப் புள்ளி |
| | | | இருதயராஜா | 3000/- | ஒப்பந்தப் புள்ளி |
| **13** | 9<br>147 சதுர அடி | 4000/- | ஏ.அபுதாகீர் | 4650/- | மின் ஏலம் |
| | | | எம்.ஏ. கலீல் ரஹ்மான் | 3055/- | ஒப்பந்தப் புள்ளி |
| | | | வேலுச்சாமி | 2850/- | ஒப்பந்தப் புள்ளி |
| | | | இருதயராஜா | 3000/- | ஒப்பந்தப் புள்ளி |
| | | | இருதயராஜா | 3000/- | ஒப்பந்தப் புள்ளி |
| **14** | 10<br>147 சதுர அடி | 4000/- | எம்.ஏ. கலீல் ரஹ்மான் | 3105/- | ஒப்பந்தப் புள்ளி |
| | | | இருதயராஜா | 3000 | ஒப்பந்தப் புள்ளி |
| | | | வேலுச்சாமி | 2850/- | ஒப்பந்தப் புள்ளி |
| **15** | 11<br>147 சதுர அடி | 4000/- | எம்.ஏ. கலீல் ரஹ்மான் | 2250/- | ஒப்பந்தப் புள்ளி |
| | | | இருதயராஜா | 4050/- | ஒப்பந்தப் புள்ளி |
| | | | வேலுச்சாமி | 3400/- | ஒப்பந்தப் புள்ளி |
| **16** | 12<br>147 சதுர அடி | 4000/- | எம்.ஏ. கலீல் ரஹ்மான் | 2250/- | ஒப்பந்தப் புள்ளி |
| | | | இருதயராஜா | 4050/- | ஒப்பந்தப் புள்ளி |
| | | | வேலுச்சாமி | 3400/- | ஒப்பந்தப் புள்ளி |
| **17** | 13<br>147 சதுர அடி | 4000/- | எம்.ஏ. கலீல் ரஹ்மான் | 2955/- | ஒப்பந்தப் புள்ளி |
| | | | இருதயராஜா | 3000/- | ஒப்பந்தப் புள்ளி |
| **18** | 14<br>147 சதுர அடி | 4000/- | எம்.ஏ. கலீல் ரஹ்மான் | 2900/- | ஒப்பந்தப் புள்ளி |
| | | | இருதயராஜா | 3000/- | ஒப்பந்தப் புள்ளி |
| **19** | 15<br>147 சதுர அடி | 4000/- | எம்.ஏ. கலீல் ரஹ்மான் | 4000/- | ஒப்பந்தப் புள்ளி |
| | | | இருதயராஜா | 4050/- | மின் ஏலம் |
| **20** | 16<br>147 சதுர அடி | 4000/- | எம்.ஏ. கலீல் ரஹ்மான் | 4000/- | ஒப்பந்தப் புள்ளி |
| | | | இருதயராஜா | 4050/- | மின் ஏலம் |
| **21** | தளம் எண். 3<br>கடை எண். 1<br>470 சதுர அடி | 10,700/- | கே.வெள்ளிங்கிரி | 6900/- | ஒப்பந்தப் புள்ளி |

மேற்படி கடைகளுக்கு மின் ஏலம், ஒப்புந்தப்புள்ளி கோரப்பட்டதில் முதல் தளத்தில் (Flot Form No-1) கடை எண். 1-க்கு (360 சதுரடி ) மற்றும் 1,2,3,4, 9,11, 12 ,19, 20 (147 சதுரடி ) ஆகிய கடைகளுக்கு மட்டுமே மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட பொது பணித்துறை வாடகை மதிப்பைக் காட்டிலும் கூடுதலதாக பெறப்பட்டுள்ளது. எனவே மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட பொது பணித்துறை வாடகை மதிப்பைக் காட்டிலும் கூடுதலதாக பெறப்பட்டுள்ள மேற்படி கடைகளை உயர்ந்தபட்ச ஏல மாத வாடகை கோரிய ஏலதாரர்களுக்கு ஒப்படைச் செய்ய ஒப்புதல் வேண்டி வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் பார்வையில் கண்ட தீர்மானத்தில், நிர்ணயம் செய்யப்பட்ட அடிப்படை மதிப்பைவிட 2% க்கும் கூடுதலாக ஏலத்தொகை வரப்பெற்றுள்ள 360 சதுரஅடி கடைகளில் வரிசை எண் 1 மற்றும் 147 சதுர அடி கடைகளில் வரிசை எண் 5, 6, 7, 8, 13 ஆகிய கடைகளை ஒப்படை செய்யலாம் எனவும், மற்ற கடைகளுக்கு மறுஏலம் கோரலாம் எனவும் தீர்மானித்துள்ளது. எனவே மன்றத்தின் ஒப்புதலுக்காக பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு: அனுமதிக்கலாம். ந.க.எண்.11486/09/அ1

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.270 நாள் 28.02.2011</u>

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண்.147 நாள் 25.02.2011ஐ ஏற்று அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண் -17

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட பட்டியலில் கண்ட குத்தகை இனங்களுக்கு அதன் எதிரே குறிப்பிட்டுள்ளவாறு உயர்ந்த பட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொகை 17.02.2011 அன்று நடைபெற்ற மின்ஏலத்தில் பெறப்பட்டுள்ளது.

| வ எண். | இனம் | அரசு மதிப்பு ரூ. | மூன்றாண்டு சராசரி ரூ. | தற்போதைய உயர்ந்த பட்சத் தொகை மற்றும் ஏலத்தாரர் பெயர் ரூ |
|---|---|---|---|---|
| 1 | சத்திரோடு, ஆம்னி பேருந்து நுழைவு வாயில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 11,21,000/- | 10,04,350/- | 12,33,000/- V.M. நாச்சிமுத்து |
| 2 | காந்திபுரம், சீனிவாசபுரம் இரண்டு சக்கர வாகனம் மற்றும் 4 சக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 25,00,000/- | 24,91,580/- | 25,31,500/- S..ரமேஷ் |
| 3 | காந்திபுரம், சீனிவாசபுரம் நவீன பொதுக் கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமை | 3,90,000/- | 3,89,373/- | 3,65,000/- K.முனியான்டி |
| 4 | சிவானந்தா காலனி பேருந்து நிலையம் அருகில் நவீன பொதுக் கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1,10,000/- | - (முதல் முறை 2010-2011–ம் ஆண்டுக்கு ஏலம் விடப்பட்டது) | ஏலதாரார் யாரும் பங்கேற்க வில்லை |
| 5 | <u>தினசரி மார்க்கெட் கடைகள்</u><br>1.சீனிவாசபுரம் தினசரிமாக்கெட் காய்கறி கடைகள் (10 கடைகள்) 17,28,29,30,31,32,46,47, 49,95.<br>2. சீனிவாசபுரம் தினசரி மார்க்கெட் மாமிசக் கடைகள் (7 கடைகள்)<br>4,6,7,17, 19,20,22 | 27/- (தினசரி வாடகையாக கடை ஒன்றுக்கு) | | காய்கடைகளுக்கு ஏலத்தாரர் யாரும் பங்கேற்கவில்லை<br>மாமிசக் கடைகளுக்கு Rs.27/- தினசரி வாடகையாக R.நாராயணன் கோரியுள்ளார் |
| 6 | ஆம்னி பேருந்து நிலையத்தில் வணிகவளாக கடை எண்.A22 | 2,000/- (மாத வாடகையாக கடை ஒன்றுக்கு) | | 15,005/- M..வித்யா |

மேற்குறிப்பிட்டுள்ள ஏல இனங்களில் வரிசை எண் 1, 2, 5-ல் ஏழு மாமிசக்கடைக்கு (4,6,7,17, 19,20,22) மற்றும் வரிசை எண் 6க்கு ஏலதாரர்களால் உயர்ந்த பட்ச ஏலத் தொகை கோரப்பட்டுள்ளது அனைத்து இனங்களுக்கும் அரசு மதிப்பைக்காட்டிலும் மூன்றாண்டு சராசரி தொகையை காட்டிலும் கூடுதலாக ஏலம்/ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள ஏல இனங்களில் வரிசை எண் 3க்கு ஏலதாரர்களால் உயர்ந்த பட்ச ஏலத் தொகை ரூ.3,65,000/- K.முனியான்டி என்பவரால் கோரப்பட்டுள்ளது. அரசு மதிப்பைக்காட்டிலும் ரூ.25,000/- குறைவாக உள்ளது ஆனால் 2009-2010 ம் ஆண்டு ஏலத்தொகைக்காட்டிலும் (ரூ.3,53,000/- க்கு) ரூ.12,000/- கூடுதலாக ஏலம்/ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள ஏல இனங்களில் வரிசை எண் 4க்கு - சிவானந்தா காலனி பேருந்து நிலையம் அருகில் நவீன பொதுக் கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் இனத்திற்கு ஏலதாரார் யாரும் பங்கேற்க வில்லை. ஆகவே ஏலம் நடத்தி உரிமம் ஒப்படைக்கும் வரை 01.04.2011-ல் துறை மூலமாக வசூல் பணி மேற்கொள்ளவும், 2011ம்ஆண்டு மார்ச் மாதம் தமிழக சட்டமன்றத் தேர்தல் அறிவிப்பு வெளியிடப்படும் சாத்தியக்கூறுகள் உள்ளன. அக்காலகட்டத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் இருக்கும் என்பதால் ஏலம் நடத்த இயலாது எனவே மேற் குறிப்பிட்டுள்ள வரி எண். 1, 2, 3, 5-ல் ஏழு மாமிசக்கடைக்கு (4,6,7,17, 19,20,22) மற்றும் வரிசை எண் 6க்கு ஏலதாரர்களால் உயர்ந்த பட்ச ஏலத் தொகை கோரப்பட்டுள்ளது அனைத்து இனங்களை உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு ஒப்படைப்பு செய்வது தொடர்பாக வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் 25.02.2011-ம் தேதிய தீர்மான எண்.142-ல் ஒப்புதல் அளித்து தீர்மானித்துள்ளதை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண் 12974/2009/(அ7)(வ)

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.271 நாள் 28.02.2011</u>

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண்.142 நாள் 25.02.2011ஐ ஏற்று அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 18

கோயமுத்தூர் மாநகராட்சி. மேற்கு மண்டலத்திற்குட்பட்ட மேட்டுப்பாளையம் சாலை குப்பைக் கிடங்கு வளாகத்திற்குட்பட்ட. கவுண்டம்பாளையம் கிராமம் க.ச.எண். 56/1, 57/1 ஆகியவற்றினை உள்ளடக்கிய 2 ஏக்கர்கள் நிலப்பரப்பில் ரூ.100.00 இலட்சங்கள் மதிப்பீட்டில் எரிவாயு மயானம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில். அதற்கு ஆட்சேபனை தெரிவித்து திருவாளர்கள் கே.கே.புதூர் குடியிருப்போர் நல சங்கம், பவானி நகர், கே.கே.புதூர், கோயமுத்தூர் அவர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடர்ந்த வழக்கின் அடிப்படையில். முதல் பிரதிவாதியான கோவை மாவட்ட ஆட்சியாளர் அவர்களுக்கு பொது மக்களின் கோரிக்கையினை சட்ட அடிப்படையில் பரிசீலனை செய்து மூன்று வாரங்களில் உத்திரவு பிறப்பிக்க உயர்நீதி மன்றம் ஆணை பிறப்பித்தது.

அதன் அடிப்படையில் கோவை மாவட்ட ஆட்சியாளர் அவர்கள் தனது செயல்முறை உத்திரவில் குடியிருப்பு பகுதிகளுக்கு அருகாமையில் எரிவாயு மயானம் அமைக்கப்படுவது பொது மக்களின் ஆட்சேபனைக்கு காரணமாக அமைந்துள்ளது எனவும், எனவே இந்துக்கள் மயானம் என 28. கவுண்டம்பாளையம் கிராம வருவாய் ஆவணங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள க.ச.எண். 52/7பி. 52/8எ . 52/15 மற்றும் 52/16 ஆகிய புலங்களை உள்ளடக்கிய 1.015 ஹெக்டேர் நிலப்பரப்பில் எரி வாயு மயானம் கட்ட அமைத்துக் கொள்ள ஆணையிட்டுள்ளார்.

எனவே உயர்நீதி மன்ற உத்திரவு மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை உத்திரவு ஆகியவற்றின் அடிப்படையில் மேற்குறிப்பிட்டுள்ள இடத்தில் ரூ150.00 இலட்சங்கள் மதிப்பீட்டில் மாநகராட்சியின் நிதியில் எரிவாயு மயானம் அமைக்கவும், மேற்காண் திட்டப்பணிக்கு நிர்வாக அனுமதி நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர் அவர்களிடம் கோரவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** இப்பணியினை மாநகராட்சியின் நிதியில் மேற்கொள்ளவும். நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர் அவர்களிடம் நிர்வாக அனுமதி கோரவும் அனுமதிக்கலாம்.

ந,க, எண், 1885/2011/எம்,டி,1.

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.272 நாள் 28.02.2011</u>

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 19

உலக தமிழ் செம்மொழி மாநாட்டினை ஒட்டி கோயம்புத்தூர் மாநகராட்சி சார்ந்த அவினாசி சாலை பகுதிகளில் 20 நவீன பேருந்து நிறுத்த பயணியர் நிழற்குடைகள் மாநகராட்சியால் அமைக்கப்பட்டுள்ளதில் அவற்றினை தனியார் பங்களிப்புடன் அவற்றில் விளம்பரம் செய்து பராமரிப்பு மற்றும் தூய்மை பணிகள் செய்து கொள்ளும் உரிமையை 3 ஆண்டுகளுக்கு வழங்கவும், மேலும் 3 ஆண்டுகளுக்கு அனுமதி புதுப்பித்துக் கொள்ளவும் - பின்னர் திரும்ப ஒப்படைப்பு செய்யும் பணிக்கான ஒப்பந்தபுள்ளி 11.2.2011 ல் பெறப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி அளித்த மூன்று விளம்பர நிறுவனங்களின் விலைப்புள்ளி உறைகள் 21.2.2011ல் திறக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளி அளித்துள்ளனர்.

| வ.எண். | விளம்பர நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்த புள்ளி தொகை விவரம் |
|---|---|---|
| 1. | தி/ ள். மெட்ரோ மல்டி மீடியா பி. லிட்., சென்னை | ரூ. 36,72,000/- |
| 2. | தி/ ள். டைம்ஸ் அட்வர்டைசர்ஸ் , கோயம்புத்தூர் | ரூ. 45,08,000/- |
| 3, | தி/ ள். டைமன்ட் பப்ளிசிட்டிஸ் பி. லிட்., சென்னை | ரூ. 57,66,090/- |

மேற்குறித்த மூன்று விளம்பர நிறுவனங்களில் அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ. 57,66,090/-தினை கோரியுள்ள தி/ள். டைமன்ட் பப்ளிசிட்டிஸ் பி.லிட்., சென்னை நிறுவனத்திற்கு ஆண்டு குத்தகை அடிப்படையில் தமிழ் நாடு அரசு விளம்பர பலகைகள் உரிமம் சட்டம் மற்றும் விதிகள் 2003ல் குறிப்பிட்டுள்ளவாறு 3 ஆண்டுகளுக்கு பேருந்து நிறுத்த பயணியர் நிழற்குடைகளில் பராமரிப்பு மற்றும் தூய்மை பணிகள் மேற்கொள்ளவும், மூன்று ஆண்டு முடிவிற்கு பின், மேலும் மூன்று ஆண்டுகளுக்கு கால நீடிப்பு வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 652/2011/ எம்.எச்.5

மாநகர மன்ற தீர்மானம் எண்.273 நாள் 28.02.2011

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 20

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 24.02.2011 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் | விலை குறை-வுக்கு பின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3397/10/ எம்.டி.1 | வார்டு எண்.60 கோவில்மேடு பகுதி திலகர் வீதி மற்றும் நல்லாம்பாள் வீதி பள்ளத்தில் இணைப்பு பாலம் அமைத்தல் | 22.80 | 23-02-2011 முதல் அழைப்பு | திருமதி. யூ.மணி | 4.52 அதிகம் | 3.99 அதிகம் |
| 2 | 740/11/ எம்.டி.5 | வார்டு எண்.52 பொன்னையராஜபுரம் மாநகராட்சி பொது ஒதுக்கீட்டு இடத்தில் (லீலா அப்பார்ட்மெண்ட் அருகில்) பூங்கா அமைத்தல் (சட்டமன்ற உறுப்பினர் நிதி) | 30.00 | 23-02-2011 முதல் அழைப்பு | திருமதி.யூ. மணி | 4.96 அதிகம் | 4.64 அதிகம் |
| 3 | 809/11/ எம்.டி.2 | வார்டு எண்.33 டாடாபாத் நடுநிலைப் பள்ளி அறிவியல் பூங்காவிற்கு சுற்றுசுவர் மற்றும் நடைபாதை அமைத்தல் | 19.15 | 18-02-2011 முதல் அழைப்பு | திருமதி.கே பங்கஜம் | 5.37 அதிகம் | 4.82 அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- வரிசை எண்.1,2 மற்றும் 3-ல் உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 3397/2010/எம்.டி.1

மாநகர மன்ற தீர்மானம் எண்.274 நாள் 28.02.2011

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 21

**பொருள்** கோவை மாநகராட்சி - வடக்கு மண்டலம் - பொறியியற் பிரிவு எண் 3, வார்டு எண் 30 -சக்தி சாலையில் உள்ள கணபதி கிராமம் க.ச.எண். 1274/1 இந்துகள் மயானத்தில் எரி வாயு மயானம் கட்ட அனுமதிக்கோருதல் - சம்பந்தமாக,

கோவை மாநகராட்சி, வடக்கு மண்டலம் வார்டு எண் 30. சக்தி சாலை கணபதி கிராமம் க.ச. எண் 1274/1 க்குப்பட்ட, தற்போது இந்துக்கள் மயானநில உபயோகத்தில் உள்ள 2.49 ஏக்கர் நிலபரப்பில் எரிவாயு மயானம் அமைத்துத்தர இவ்வார்டு மாமன்ற உறுப்பினராகிய நிதிக்குழுத்தலைவர் அவர்கள் கோரியதன் பேரில் இடம் ஆய்வு செய்யப்பட்டது.

தற்போது இம்மயானத்தில் போதுமான இடம் இல்லாத காரணத்தால் இங்கு எரிவாயு மயானம் அமைத்தல அவசியமாகிறது. எனவே இப்பகுதியில் எரிவாயு மயானம் அமைக்கும் பணிக்கு ரூ. 150.00 இலட்சத்தில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலும் இப்பணிக்கு நடப்பு நிதியாண்டில் போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால். மேற்குறிப்பிட்டுள்ள இடத்தில் ரூ.150.00 இலட்சங்கள் மதிப்பீட்டில் மாநகராட்சியின் நிதியில் எரிவாயு மயானம் அமைக்கவும், மேற்காண் திட்டப்பணிக்கு நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர் அவர்களிடம் நிர்வாக அனுமதி கோரவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** இப்பணியினை மாநகராட்சியின் நிதியில் மேற்கொள்ளவும் நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர் அவர்களிடம் நிர்வாக அனுமதி கோரவும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 1904/2011/எம்.டி.1

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.275 நாள் 28.02.2011</u>

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 22

பொருள் :- பொது சுகாதாரம் - கோயம்புத்தூர் மாநகராட்சி – ஆர்.எஸ்.புரம் ஆரோக்கியசாமி சாலை – T.S.No: 646 to 652 இல் உள்ள இரவு தங்கும் விடுதியில் உள்ள மன நலம் குன்றியவர்களுக்கு சிகிச்சை அளிக்க கொங்கு நாடு மனநல அறக்கட்டளை ஏற்று நடத்துதல் - தொடர்பாக.

*****

கோவை மாநகராட்சியின் சார்பில் ஆர்.எஸ்.புரம் ஆரோக்கியசாமி சாலையில் இரண்டு இரவு தங்கும் விடுதிகள் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டு வருகிறது. இதில் முதியோர்கள் மற்றும் ஆதரவற்றோர்கள் தங்க வைத்து பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். இவர்களுக்கு மாநகராட்சி சார்பில் உணவு, தங்குமிடம் (உரிய வசதிகளுடன்) மருத்துவ வசதி, மருத்துவ ஆலோசனைகள், சுய வேலைவாய்ப்பு பயிற்சி போன்ற அனைத்தும் மாநகராட்சியால் செய்து தரப்பட்டு வருகிறது. தற்சமயம் மன நோயாளிகளுக்கு சிகிச்சை தர உரிய மருத்துவ அலுவலர்கள் இம் மாநகராட்சியில் இல்லை.

அரசாணை எண் 23, மாற்று திறனாளிகள், நலத் துறை, நாள் 04.06.2010 ன் படியும், மாற்று திறானாளிகளின் மாநில ஆணையர் சென்னை அவர்களின் செயல் முறை கடித எண்.3922/ம.தி.ந.(2) 2010 நாள். 13.09.2010 ன் படியும், மன நலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறு வாழ்வு அளிப்பதற்காக 30 மாவட்டங்களை உள்ளடக்கி பத்து மறு வாழ்வு இல்லங்களை தகுந்த தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் அமைத்து நடத்த அனுமதியும், அதற்கான நிதி மாவட்டம் ஒன்றுக்கு ரூபாய் 534700/- எனவும் ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது. இதில் கோவை மாவட்டத்தில் கொங்கு நாடு மன நல அறக்கட்டளை என்ற தன்னார்வ தொண்டு நிறுவனம் மன நலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான மறுவாழ்வு மையங்கள் துவக்கி நடத்த தேர்வு செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் கடித எண்.1493/2010 நாள்.22.09.2010ல் கோயம்புத்தூர் மாவட்டத்தில் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான மையத்தை செயல்படுத்திட கொங்கு நாடு மனநல அறக்கட்டளை நிறுவனம் தேர்வு செய்யப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துள்ளார்.

கொங்குநாடு மனநல அறக்கட்டளை நிறுவனத்திற்கு, இம்மாநகராட்சியில் உள்ள இரவு தங்கும் விடுதிகளில் வைத்து பராமரிக்கப்பட்டு வரும் மனநலம் பாதிக்கப்பட்டோர்களுக்கு சிகிச்சை அளிக்க கீழ்க்கண்ட நிபந்தனைகளின் பேரில் ஏற்று நடத்த அனுமதிக்கலாம்.

1. மாநகராட்சியால் குடிநீர், மின்சாரம் மற்றும் கழிப்பிட வசதிகள் வழங்கப்படும்.
2. மாநகராட்சி இந்த இரவு தங்கும் விடுதியினை திரும்ப ஒப்படைக்க கோரும் போது எந்த வித நிபந்தனையுமின்றி ஒப்படைக்க வேண்டும்.

எனவே ஆர்.எஸ்.புரம் ஆரோக்கிய சாமி சாலை – T.S.No: 646 to 652 இல் உள்ள இரவு தங்கும் விடுதியில் மனநலம் பாதித்தவர்களை அனுமதித்து சேவை செய்யும் பணியை கொங்கு நாடு மனநல அறக்கட்டளை நிறுவனத்தார் ஏற்று நடத்த மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் எண்:4765/2010 /எம்இ10

மாநகர மன்ற தீர்மானம் எண்.276 நாள் 28.02.2011

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 23

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட உக்கடம் பேருந்து நிலையத்தில் வடமேற்குபுற நுழைவுவாயில் அருகில் ஆவின் பாலகப்பெட்டி அமைக்க திரு.முகம்மது உபைஸ் (உடல் ஊனமுற்றவர்) என்பவருக்கும், கே.ஜி.திரையரங்கம் முன்புறம் அமைந்துள்ள நகர பேருந்து நிறுத்தம் அருகில் ஆவின் பாலகம் அமைக்க அனுமதி வழங்குமாறு திரு.ஐ.அப்துல் காதர் என்பவருக்கும் அனுமதி வழங்குமாறு ஆவின் பொது மேலாளர் கடிதம் அனுப்பியுள்ளார்.

மேலும் அவர் தனது கடிதத்தில் மேற்படி நபர்களுக்கு ஆவின் பாலக பெட்டி வைத்திட மாநகராட்சி அனுமதி வழங்கும் பட்சத்தில் ஆவின் நிறுவனத்தின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை செய்ய அனுமதி வழங்குவதில் எந்தவித ஆட்சேபணையும் இல்லை எனவும், அதற்காக செலுத்தப்பட வேண்டிய நில வாடகையை ஒன்றியம் செலுத்த தயாராக உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

பொது பணித்துறை வழிகாட்டுதல்படி வாடகையாக மாதம் ஒன்றுக்கு ரூ.3584/- என்ற அடிப்படையில் மேற்படி நபர்களுக்கு உக்கடம் மாநகராட்சி பேருந்து நிலைய வளாகத்திலும் மற்றும் கே.ஜி.திரையங்கம் முன்புறம் உள்ள நகர பேருந்து நிலையம் அருகில் ஆவின் பாலக பெட்டி வைக்க காவல் துறையினரிடம் போக்குவரத்து இடையூறு இல்லை என தடையின்மை சான்றிதழ் பெற்றப் பின்னர் அனுமதி வழங்குவது குறித்து முடிவு செய்ய மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றத்தின் முடிவிற்காக ந.க.எண்:1548/10 /அ1(தெ)

மாநகர மன்ற தீர்மானம் எண்.277 நாள் 28.02.2011

அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**